Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 117 | செவ்வாய்க்கிழமை | பங்குனி 10 ஆம் நாள் 23 மார்ச் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 20 விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

"கெடுகுடி சொற்கேளாது எண்டு சொல்லுறவை. அதால தான் ஐ.நா.வை பற்றி கவலையில்லையெண்டு கதையளக்கினம் போல"



# ஐ.நா. பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு!

## மௌனம் கலைக்காத இந்தியா!

கொழும்பு, மார்ச் 23

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. பிரேரணை தொடர்பில் இந்தியா வின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இதனால் இந்தியா பிரேரணையை ஆதரிக்குமா? அல்லது எதிர்க்குமா? என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. 19 ➤

## வடக்கில் நேற்றும் 4 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், மார்ச் 23

வடக்கு மாகாணத்தில் நேற்று 4 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வ 19 ➤

## எந்த முறைமையில் மாகாணத் தேர்தல்?

*அரசின் கழுத்தை பிடிக்கிறது ஐ.ம.ச.*

கொழும்பு, மார்ச் 23

மாகாண சபைகளுக்கான தேர்தல் எப்போது நடத்தப்படும்? எந்த முறைமையின்கீழ் நடத்தப்படும் என்பவை தொடர்பான தமது நிலைப்பாட்டை அரசாங்கம் வெகுவிரைவில் அறிவிக்க வேண்டும் என்று 19 ➤

## ஐ.நாவை பற்றி கவலையில்லை! படைகளைப் பாதுகாக்க சட்டம்!

*இலங்கை அரசு திட்டவட்டம்*

கொழும்பு, மார்ச் 23

ஐ.நா.மனித உரிமைகள் சபையில் வாக்கெடுப்பு முடிவு என்னவாக இருந்தாலும், தேசிய பொறிமுறைக்கே இலங்கை இடமளிக்கும். படையினருக்கு சட்டரீதியான பாதுகாப்பும் வழங்கப்படும். இவ்வாறு அரசு திட்ட 19 ➤



## கொரோனா தொற்றால் சுதுமலை பெண் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த பெண் ஒருவர், கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்துள்ளார் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், சுதுமலையைச் சேர்ந்த 63 வயதுடைய பெண் ஒருவரே உயிரிழந்துள்ளார். திடீர் மூச்சுத் திணறல் காரணமாக நேற்று 19 ➤

## கூடுகிறது நாடாளுமன்று கேள்விகளுடன் எதிரணி!

கொழும்பு, மார்ச் 23

நாடாளுமன்றம் இன்று காலை 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது. சீனி இறக்குமதியின்போது இடம்பெற்றது எனக் கூறப்படும் மோசடி, காடழிப்பு விவகாரம் மற்றும் ஊடகங்கள் தொடர்பான ஜனாதிபதியின் 19 ➤

## வம்புச் சண்டைக்குச் சென்று வாங்கிக்கட்டிக் கொள்ளாதீர்!

*அரசை எச்சரிக்கின்றது ஐ.ம.ச.*

கொழும்பு, மார்ச் 23

இலங்கைக்கு ஏதேனுமொரு வழியில் தடைகளை விதிப்பதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபை நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் அதன்மூலம் நாட்டு மக்களுக்கே பெரும் 19 ➤

'பொ-பொ' பேரணியில் பங்குகொண்டோர் மீதான

## பொலிஸின் 'பி' அறிக்கைக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 23

'பொத்துவில் முதல் பொலிகண்டி வரை' பேரணியில் பங்கேற்றவர்கள்மீது பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள 'பி' அறிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரம் மீதான வழக்கு நேற்று பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணைகளின் பின்னர் அரச தரப்பின் பூர்வாங்க ஆட்சேபனைகளை எழுத்து மூல சமர்ப்பணம் செய்வதற்கு அவகாசம் கோரப்பட்டதை அடுத்து வழக்கு எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. 18 ➤

## உருத்திரபுரீஸ்வரர் ஆலய அகழ்வுக்கு மக்கள் எதிர்ப்பு




கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி உருத்திரபுரம் உருத்திரபுரீஸ்வரர் சிவன் ஆலய வளாகத்தில் தொல்பொருள் சான்றுகள் உள்ளன என்று தெரிவித்து தொல்லியல் திணைக்களம் எல்லையிட்டு அகழ்வுப் பணியை ஆரம்பித்துள்ள நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்கள் சுழற்சி முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆலய வளாகத்தில் நேற்றுக் காலை 11 மணிமுதல் இந்த கவன 19 ➤

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்
அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.70,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே
• அதிகபட்ச இரகசியத் தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
சந்தை நிலைவரங்களின் அடிப்படையில் குறிப்பிட்ட முற்பணமானது முன்னறிவித்தலின்றி மாற்றப்படலாம்.
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக்கடன்
011 200 88 88
செலான் வங்கி
Brand Finance Rating "A+" Fitch Rating: "A" (lka) கம்பனிப் பதிவிலக்கம் PQ 9
இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி

# மரண அறிவித்தல்



## கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம்

**(ஓய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்,தேசிய வீடமைப்பு அதிகார சபை,யாழ்ப்பாணம்)**

உடுவில் வீதி,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வேந்திரம் அவர்கள் நேற்று (22.03.2021) திங்கட்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை அன்னம்மா தம்பதியினரின் ஏக புதல்வனும் பொன்மலரின்(கமலா) அன்புக் கணவரும் திருமதி நாகதேவி ஜீவராசா(கலா) இன் அன்புச் சகோதரனும் சிவதரன்(பிரான்ஸ்),பாமினி,தீபன் (ஆசிரியரர்-கிளிநொச்சி ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை) ஆகியோரின் பாமிகு தந்தையும் செல்வரூபனின் அன்பு மாமனாரும் சங்கவி,சர்வகன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3.00 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு:-**
**தீபன் (இலங்கை)-0772201118**
**சிவதரன் (பிரான்ஸ்)-0033753370135**

**தகவல்:-**
**குடும்பத்தினர்**

# புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் விழா

கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் **வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல்** 21.03.2021ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விளக்கு வைக்கும் வைபத்துடன் ஆரம்பமாகி 28.03.2021 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பங்குனி உத்தரப் பொங்கல் உற்சவத்துடன் நிறைவடையவுள்ளது. இவ்வாண்டு கொவிட் 19 நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பின்வரும் நடைமுறை களைக் கடைப்பிடிக்குமாறு நாகதம்பிரான் அடியார்களை கேட்டுக் கொள்கிறோம்.

- பண்டைய மரபுகளுக்கமைவாக பண்டம் மீசாலை புத்தூர் சந்திவரை சென்று வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களே ஒரே தடவையில் நேர்த்திகளை நிறைவேற்றுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். நேர்த்திகளை நிறைவேற்றுகின்றவர்கள் விரைவாக ஆலயத்திலிருந்து வெளியேறுவதன் மூலம் ஏனைய அடியார்களும் தமது நேர்த்திகளை நிறைவேற்ற முடியும்.
- 21.03.2021ஆம் திகதி விளக்கு வைக்கும் தினம் காலை 7 மணியிலிருந்து தினமும் பொங்கல் உற்சவம் வரை காவடி, பாற்செம்பு, பறவைக்காவடி மற்றும் ஏனைய நேர்த்திகளை நிறைவேற்ற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விளக்கு வைத்த நாட்களின் நேர்த்திகளை நிறைவேற்றுவதன் மூலம் உற்சவ தினத்தன்று நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும்.
- எந்தவிதமான வர்த்தக நடவடிக்கைகளுக்கும் இவ்வாண்டு அனுமதி வழங்கப்படவில்லை.
- வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற பொது பேருந்து சேவைகளுக்கு எவ்வித அனுமதிகளும் வழங்கப்படவில்லை. கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மட்டும் அடியார்களின் நலன்கருதி பொதுபோக்குவரத்து சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது.
- கொவிட் 19 நிலைமையினைக் கருத்தில் கொண்டு முகக் கவசம் அணிதல், கைகளை கழுவுதல், கட்டாயமானது முகக்கவசம் இன்றி வருகின்ற அடியார்கள் ஆலயத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள்.


இவ் நடைமுறைகளைப் பின்பற்றி ஆலயத்துக்கு வருகை தந்து விரைவாக நேர்த்திகளை நிறைவேற்றி ஆலயச் சூழலில் இருந்து வெளியேறி ஏனையவர்களும் நேர்த்திகளை நிறைவேற்றி கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அடியார்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**ஆலயபரிபாலன சபை**
கரைச்சி புளியம்பொக்கனை
நாகதம்பிரான் ஆலயம்.

# மரண அறிவித்தல்

## யோசேப் கைமன் பாலசிங்கம்

**(உரிமையாளர்-கிறிஸ்ரி மெடிக்கல், கொட்டாஞ்சேனை)**



கோயில் வீதி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், ஜம்பட்டா வீதி, கொட்டாஞ்சேனையை நிரந்தர வசிப்பிடமாகவும் பாண்டியன்தாழ்வினை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திரு. யோசேப் கைமன் பாலசிங்கம் அவர்கள் நேற்று (22.03.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் - இராசமணி தம்பதியரின் அன்பு மகனும், வள்ளியம்மை (கதிர்) அவர்களின் அன்பு கணவரும், டெஸ்மன் (கொழும்பு), சர்மினி பெற்றினா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமரர் துரைசிங்கம் பூமணி (கனடா) அமரர் வீரசிங்கம், ஜெயமணி (பிரான்ஸ்), அஞ்சலா (கனடா), ராசசிங்கம் (யாழ்ப்பாணம்), அமரர் ரெட்ணசிங்கம் மற்றும் றுக்குமணி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், லீலா (யாழ்ப்பாணம்), பீற்றர் போல் (கனடா), அமரர் துரைசிங்கம், நவரட்ணம் (கனடா), லூர்த்தம்மா (யாழ்ப்பாணம்), ராணி (கனடா) மற்றும் அமரர் சீலன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பாண்டியன்தாழ்வு இல்லத்தில் நடைபெற்று, அதனை தொடர்ந்து கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தோற்றம்**
**20.02.1934**

**மறைவு**
**22.03.2021**

**83/1, கொழும்புத்துறை வீதி,**
**பாண்டியன்தாழ்வு.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**டென்சி-077 063 5012**

# 10,000 பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கல்

## நேற்று முதல் ஆரம்பம் என அரசு அறிவிப்பு

**கொழும்பு, மார்ச் 23**

**மேலும் 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அரச சேவையில் நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்; ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாக பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. 60 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க முதலில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நல்லாட்சியில் நியமனம் வழங்கப்பட்ட 14 ஆயிரம் பயிற்சிப் பட்டதாரிகளில் 10 ஆயிரம் பேரை நிரந்தர சேவையில் இணைக்க இன்று (நேற்று)முதல் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கொரோனாத் தொற்றால் அவர்களை அரச சேவைக்குள் இணைக்கும் பணி தாமதமானது. அவர்களின் ஆவணங்களைப் பெற்று நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மாவட்டச் செயலாளர் அலுவலக மட்டத்தில் இந்த நியமனம் வழங்கப்படும். இவர்களின் பெயர்ப்பட்டியல் அமைச்சு இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளது - என்றார். (ப)

---

மருதடிப் பெருந்திருவிழா

## சுகாதார நடைமுறைகளை பக்தர்கள் கடைப்பிடிக்குக



மானிப்பாய்,மார்ச் 23

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று ஆரம்பமான நிலையில் ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் தமது கைகளை தொற்று நீக்கி திரவங்கள் கொண்டு கழுவிய பின்னரே உள்நுழைய அனுமதிக்கப்படுகின்றனர்.

அத்துடன் ஆலய உட்பிரவாரத்தில் சமூக இடைவெளிகளைப் பேணுவதை அடியவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். புகைப்படம் எடுப்பது 'அன்னதானம்' மற்றும் 'பிரசாதம்' வழங்கும்' நடைமுறைகள் முற்றாக தவிக்கப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம-ஐ,50)

---



ஆசிரியர்களை நியமிக்கக்கோரி

## பிரதேச செயலகத்தை பெற்றோர் முற்றுகை!

வவுனியா, மார்ச் 23

வவுனியா மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரி பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அண்மையில் அரசாங்கத்தால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்ட 6 பேர் மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும் பாடசாலை தவணை விடுமுறையை அடுத்து அவர்கள் வேறு செயற்றிட்டத்துக்காக மீள அழைக்கப்பட்டிருந்தனர்.

இதனால் தமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தே அவர்கள் செயலகத்தை முற்றுகையிட்டனர்.

ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் பின்தங்கியுள்ளது. எனவே ஆசிரியர் வெற்றிடத்தை நிரந்தரமாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

முற்றுகையிட்ட மக்கள் பிரதேச செயலகத்தின் நிர்வாகக் கட்டத்துக்குள் சென்றமையால் சற்றுநேரம் குழப்பமான நிலை ஏற்பட்டிருந்தது.

இந்த நிலையில், பிரதேச செயலாளர் போராட்டக்காரர்களுடன் முன்னெடுத்த பேச்சு வார்த்தையையடுத்து போராட்டம் கைவிடப்பட்டதுடன், நிலைமை சுமூகமாகியிருந்தது.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர் அசங்க காஞ்சனகுமார, பாடசாலை விடுமுறை விடப்பட்டதையடுத்தே இந்த 6 ஆசிரியர்களையும் வேறு செயற்றிட்டத்துக்காக மீள அழைத்திருந்தோம். எனினும் ஒரு சில நாள்களில் அவர்களை மீண்டும் பாடசாலைக்கு நியமிப்பதற்கான நடவடிக்கையை ஏற்கனவே எடுத்துவிட்டோம்-என்றார்.(ற-110)

---

## குருநாதர் ஆலய வீதியை புனரமைக்கக் கோரிக்கை

சாவகச்சேரி, மார்ச் 23

வரணி மாசேரி கிழக்கில் உள்ள குருநாதர் ஆலய வீதியைப் புனரமைத்து வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் உள்ள நிலையில் தினமும் பெருமளவு கனரக வாகனங்கள் அதனூடாகப் பயணிக்கின்றன. இதனால் வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்துள்ளது. எனவே வீதியைப் புனரமைத்து வழங்குமாறு உரிய தரப்பினரிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-9)

---

## ஜீவ ஊற்று அன்பின் இல்லம் பயனாளிகளிடம் கையளிப்பு

சாவகச்சேரி, மார்ச் 23

சாவகச்சேரி கெருடாவில் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தினருக்கு ஜீவ ஊற்று அன்பின் கரம் ஊடாக புதிதாக அமைக்கப்பட்ட ஜீவ ஊற்று அன்பின் இல்லம் பயனாளியிடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது. இந்த உதவித்திட்டத்துக்கான நிதி அனுசரணை நெதர்லாந்து சுவிஷேச தரிசன சபையில் அங்கத்தவராகவுள்ள லோரன்ஸ் பிரயினால் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் ஜீவ ஊற்று அன்பின் கரம் செயலாளர் பிரவீன், ஜீவ ஊற்று அன்பின் கரம் நிர்வாக உறுப்பினர் சுந்தர் மற்றும் தென்மராட்சிப் பணியாளர் அன்ட்றூ ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (ற-222)

---

## தனிமைப்படுத்தல் நிறைவு: 127 பேர் வீடு திரும்பினர்

யாழ்ப்பாணம், மார்ச் 23

கொரோனாத் தொற்றுக் காரணமாக வசாவிளான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 127 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து தத்தம் வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

டுபாய்,சவூதி அரேபியா,மலேசியா, மியான்மார், எகிப்து மற்றும் ஓமான் ஆகிய நாடுகளில் இருந்து வருகை தந்தவர்களே தனிமைப்படுத்தலை நிறைவு செய்து நேற்று வீடு திரும்பினர்.

பதுளை,மொனராகலை, இரத்தினபுரி, அம்பாந்தோட்ட, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இவர்கள் தமது வீடுகளுக்கு செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகளை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர். (ஐ)

---

## தனிமை விதி மீறிய 6 பேர் கைது

கொழும்பு, மார்ச் 23

தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 6 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைய கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதி முதல் இதுவரையில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய 3 ஆயிரத்து 381 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டில் தனிமைப்படுத்தல் தொடர்பான சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படு கின்றன. எதிர்வரும் பண்டிகை காலங்களில் அனைவரும் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் பின்பற்ற வேண்டும் எனவும் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ப)

---

## காகிதங்களுக்கு பற்றாக்குறை

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் காகிதப் பற்றாக்குறை நிலவுகிறது. காகிதத்தின் விலையும் 30 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என இலங்கை அச்சீட்டாளர்கள் சங்கத்தின் தலைவர் டிலான் சில்வா தெரிவித்துள்ளார்.

கொள்கலன்களின் பற்றாக்குறையால் காகித இறக்குமதிக்கு அதிக செலவு ஏற்பட்டுள்ளது. சீனா, இந்தியா, இந்தோனேசியா மற்றும் கொரியா ஆகிய நாடுகளிலிருந்து காகிதங்கள் இறக்குமதி செய்யப்படுகிறது. தற்போது இந்தியாவிலும் காகிதப் பற்றாக்குறை நிலவுகிறன. மேலும் நீண்ட கால குத்தகை அடிப்படையில் ஏற்றுக்கொண்டுள்ள விடயங்களை அச்சிடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தற்போது இருப்பிலுள்ள காகிதங்களை சிறிது காலத்துக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வஇ)

# தீர்மானங்களை நிராகரித்தால் நெருக்கடிகள் மேலும் அதிகரிக்கும்

## கலாநிதி தயான் ஜயதிலக அரசுக்கு எச்சரிக்கை

**கொழும்பு, மார்ச் 23**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தற்போதைய பிரேரணையில் இலங்கை பற்றிய மீளாய்வுக்காலம் ஆறு மாதங்களாக சுருக்கப்பட்டுள்ள நிலையில் அந்தப் பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக நிராகரித்தால், இலங்கைக்கு மேலும் நெருக்கடிகளே அதி கரிக்கும் என்று ஐ.நா.வுக்கான முன்னாள் வதிவிடப் பிரதிநிதியும் எதிர்க்கட்சித் தலைவரின் சர்வதேச உறவுகளுக்கான சிரேஷ்ட ஆலோ சகருமான கலாநிதி.தயான் ஜயத்திலக தெரிவித்திருந்தார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் நிறைவேற்றப்படும் இலங்கை பற்றிய தீர்மானத்தை நிராகரிக்கவுள்ளோம் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, வெளிவிவகார செயலாளர் ஜெயநாத் கொலம்பகே ஆகியோர் தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய நிலையில் இலங்கை அரசுக்கு மூன்று தெரிவுகளே காணப்படுகின்றன. அதில் இலங்கை எதனைத் தெரிவுசெய்யப் போகின்றது என்பதிலேயே இலங்கையின் எதிர்காலம் உள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் விடயங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து அறிவதற்காக நியமிக்கப்பட்ட, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முறையாக நடைமுறைப்படுத்தியிருந்தால், தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிரேரணை உள்ளிட்ட நெருக்கடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கமாட்டா.

தற்போதைய நிலையில் ஆட்சியாளர்களுக்கு மூன்று தெரிவுகளே காணப்படுகின்றன. முதலாவது முற்றாக ஐ.நா. தீர்மானத்தை எதிர்த்து சர்வதேசத்தைப் பகைத்துக்கொண்டு நடைபெறுவனவற்றுக்கு முகங்கொடுப்பதாகும்.

இரண்டாவது,தெரிவு மாகாண சபை முறைகளின் அதிகாரங்களை நீக்கி தேர்தலை நடத்திவிட்டு பின்னர் புதிய அரசமைப்பின் பெயரில் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நீக்கிவிட்டு அதிகாரக் குவிப்பைச் செய்து இந்தியா உள்ளிட்ட சர்வதேசத்தை காலங்கடத்தி ஏமாற்றுவதோடு அவ்வப்போது நெருக்கங்களையும் விரிசல்களை யும் காண்பித்து சீரற்ற நிலைமைகளை பேணுதல். அதுமட்டுமன்றி இனக்குழுமங்களை மையப்படுத்திய நெருக்கடிகளை ஏற்படுத்துதல்.

மூன்றாவதாக, நிலைமைகளைப் புரிந்து கொண்டு ஐ.நா.தீர்மானத் துக்கு அமைவாக உள்நாட்டில் தேசிய ரீதியிலான வெளிப்படைத்தன்மையுடனான பொறிமுறையொன்றை ஏற்படுத்தி, ஒவ்வொரு ஆறு மாதங்கள் காலப்பகுதிக்கும் மீளாய்வு செய்யப்படும்போது முன்னேற்றகரமான நிலைமைகளை வெளிப்படுத்தல்.- என்றார்.

(த-இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பட்டமளிப்பு விழாவின் போது 26.02.2021 கல்வி முதுகல்விமாணி (MED) பட்டம் பெற்றுக் கொண்ட எமது பாடசாலை ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.



திருமதி
**நிறைந்தினி கெங்காதரன்**
BA (Hons).PGDE,MED(1st Class)



திரு கனகரத்தினம்
**துஷ்யந்தன்**
NDT (Primary), BA,PGDE, MA (Tamil) MED.

வாழ்த்துக்கள்

**பாராட்டி வாழ்த்துவோர்:**
**பாடசாலை ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**



சைவமன்றம்
சிட்னி முருகன் கோயில்
தமிழ் கல்வி கலாச்சார நிலையம்

The Saiva Manram
Sydney Murugan Temple
Tamil Educational & Cultural Centre



அவுஸ்திரேலியா அருள்மிகு சிட்னி முருகன் ஆலய

### சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா

சிட்னி முருகப் பெருமானுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சிற்பத்தேர் சார்வரி வருடம் பங்குனி 11ம் நாள் (24.03.2021) புதன்கிழமை காலை 7 மணியளவில் வரும் சுபவேளையில் வெள்ளோட்டம் விட இறைவன் திருவருள் கூடியுள்ளது.



சிற்பத்தேர் நிர்மாணிப்பு :
விஸ்வப் பிரம்மஸ்ரீ. ரதகலாசூரி. ரதகலஞானி
ஸ்தபதி செல்லையா பாலச்சந்திரன் ஆச்சாரியார் குழுவினர்,
ஸ்ரீ காளிகா சிற்பாலயம்,
புத்தூர்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

வெள்ளோட்ட விழாவை முன்னிட்டு தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன் தலைமையில் பாராட்டு விழா நடைபெறவுள்ளது. ஸ்தபதி செ. பாலச்சந்திரன் அவர்களும் அவரது குழுவினர்களுக்கும் கௌரவிப்பு நிகழ்வு இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த கௌரவிப்பு நிகழ்வில் பங்குபற்றி இறையருள் திருவருள் பெறுமாறு சிட்னி முருகன் ஆலய நிர்வாகக் குழுவினர் வேண்டிக் கொள்கின்றோம்.





### கண்ணீர் அஞ்சலி

வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரி மன்றத்தில் உறுப்பினராக உள்ள வைத்தியகலாநிதி
**க.ஐங்கரன்** அவர்களின் தந்தை

**கந்தையா கணபதிப்பிள்ளை**
(ஓய்வுநிலை பிரதிஅதிபர்
யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**வடமாகாண ஆயுள்வேத மருத்துவர் நலன்புரிமன்றம்.**



### கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பகுதித் தலைவர்
அமரர்
**பிரபாலினி வரதராஜன்**
( SLTS I, Primary Trd, B.Ed, M.Ed,
குரு பிரதீபா பிரபா விருது )



அன்னாரின் திடீர் மரணச் செய்தி அறிந்து மிகவும் மனவருத்தம் அடைகின்றோம். அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்ளைத் தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**



### கண்ணீர் அஞ்சலி



எமது சங்கப் பணியாளர் திருமதி ம.சிவரஜனி
அவர்களின் அன்புத் தகப்பனார்
**திரு.அருணர் சிவனொளி**
அவர்கள் 20.03.2021 இல் இறைபதம் அடைந்தமையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)**
**திருநெல்வேலி கிழக்கு கோப்பாய்.**



## மாவட்ட பொது வைத்தியசாலை, மன்னார்
## பெறுகைகளுக்கான அழைப்பு
### மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கான தளபாடங்கள் வழங்கல் – 2021

1. மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்குப் பின்வரும் தளபாடங்கள் வழங்கலுக்கு தகுதியான, தகைமை வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகள் கோரப்படுகின்றன.

| இல | விபரம் | பிணை வைப்புப்பணம் | மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | தளபாடங்கள் வழங்கல் NP/04/42/DGH/MN/2/5/2021/CBG | 40,000.00 | 1000.00 |

2. விலை மனுதாரர் கடந்த காலங்களில் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டவராகவோ அல்லது நேர்மையற்றவராகவோ கறுப்புப்பட்டியலில் உள்ளவராகவோ இருத்தல் கூடாது.
3. வலுவான வியாபார நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் கொண்டிருத்தல் வேண்டும்.
4. வட மாகாணத்தில் பதிவு செய்யப்பட்ட அல்லது சேவை நிலையம் இருத்தல் வேண்டும்.
5. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கிடைக்கும் பெறுகைக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று பூர்த்திசெய்து ஆங்கில மொழி மூலமான பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 23.03.2021 தொடக்கம் 20.04.2021 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
6. பெறுகை ஆவணங்கள் , 21.04.2021 ந் திகதி 10.00 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்வி நேர முடிவில் விலைக்கேள்வியாளர்கள் அல்லது எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்ட விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.
7. மேலதிக விபரங்களினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் மாவட்ட பொது வைத்தியசாலை, கணக்கு கிளை - மன்னார் (தொலைபேசி இல. 023-2222261, 023-2251550) என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி திரு. க.செந்தூர்பதிராஜா**
**தலைவர், பிராந்திய பெறுகைகள் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை,**
**மன்னார். 23.03.2021**




## 2021 மார்ச் 23 முதல் ஏப்ரல் 30 வரை HNB சிங்கிதி கணக்குடன் சேமிக்கும் சிறுவர்கள் உங்களுக்கு ஜம்போ பரிசுக் குவியல்கள்

| ரூ.5,000ஐ வைப்பிலிடுபவர்களுக்கு | ரூ.10,000ஐ வைப்பிலிடுபவர்களுக்கு | ரூ.25,000ஐ வைப்பிலிடுபவர்களுக்கு | ரூ.50,000ஐ வைப்பிலிடுபவர்களுக்கு | ரூ.100,000ஐ வைப்பிலிடுபவர்களுக்கு | ரூ.250,000ஐ வைப்பிலிடுபவர்களுக்கு | ரூ.500,000ஐ வைப்பிலிடுபவர்களுக்கு |
|---|---|---|---|---|---|---|
| Pen Holder அல்லது Cap | Umbrella அல்லது School Bag | White Board with Accessories | Sports Bag அல்லது ரூ.1,500 பெறுமதியான Gift Voucher | ரூ.5,000 பெறுமதியான Gift Voucher | ரூ.10,000 பெறுமதியான Gift Voucher | ரூ.20,000 பெறுமதியான Gift Voucher |

- ★ இச்சலுகை கையிருப்பு உள்ள வரை மட்டுமே!
- ★ பரிசுகள் படங்களில் காட்டப்பட்டுள்ள வடிவங்களிலிருந்து வேறுபடலாம்
- ★ இந்த அன்பளிப்பு HNB சிங்கிதி சிறுவர் கணக்கு மற்றும் HNB Teen கணக்குடைய 16 வயதிற்குட்பட்டவர்களுக்கு மட்டுமே!

011 2 462 462

HNB | சிங்கிதி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

Abans · ARPICO SUPERCENTRE · DSI Sri Lanka's No. 1 Footwear · Mallika Hemachandra · Nithyakalyani Jewellery · sarasavi The Bookshop · Stone 'N' String · ZUZI The Clothing Store

Hatton National Bank PLC – PQ 82

# தொழில் ஒப்பந்தம் நேற்றைய கதையின் தொடர்ச்சி

## அங்கம் 2

நீங்கள் வேலைவாய்ப்பிற்காக அல்லது நிரந்தரமாக வதிவதற்காக வேண்டி வெளிநாட்டுக்குச்செல்ல விரும்புகிறீர்களா. தயவுகூர்ந்து உங்களினதும் உங்களின் நெருங்கிய உறவுகளினதும் பாதுகாப்பை பற்றி முதலில் அக்கரை எடுத்துக்கொள்ளுங்கள். வெளிநாட்டுக்கு செல்ல விரும்பினால் எப்பொழுதும் பாதுகாப்பான பாதையை தெரிவு செய்யுங்கள். இந்த சித்திரக்கதையில் ராஜாவுக்கு என்ன நிகழ்கின்றது என்பதை தொடர்ந்து அவதானிக்கும் போது பாது காப்பான புலம்பெயர்வை பற்றிய உங்களின் பார்வைக்கோணத்தை அதிகரித்துக்கொள்ள முடியும். இப்பத்திரிகையில் 7 நாட்களுக்கு தொடராக பிரசுரிக் கப்படவிருக்கும் சித்திரக்கதையின் 2ஆவது அங்கம் இதுவாகும். ஒவ்வொரு அங்கத்தின் இறுதியிலும் பரிசுகளை வெறும் வாய்ப்புக்களும் வழங் கப்பட்டுள்ளது.

**மனித கடத்தல்காரர்கள் பற்றி விழிப்புடனிருங்கள்! பாதுகாப்பான வெளிநாடு செல்லும் பாதையை தெரிவு செய்வதற்கு IOM நிறுவனத்தின் நேரடி இலக்கம் 0774410086 இற்கு அழையுங்கள்.**



வெளிநாட்டில் தொழில் புரிய தொழில் ஒப்பந்தம் (work permit) அவசிய மில்லை என அர்னோல்ட் ராஜவிடம் கூறினார்.



விசிட் விசா மூலம் சென்று தொழி லொன்றை தேடிக் கொள்ள முடியும் என அர்னோல்ட் ராஜாவுக்கு அடிக்கடி கூறினார்.



"இடைத்தங்கல் நாட்டில் கூட தொழிலொன்ற தேடிக்கொள்ள முடியும்" என அர்னோல்ட் ராஜாவை நம்ப வைத்தார்.




அனேகமான இடைத்தங்கல் நாடுகள் பிறநாட் டவர் களை விசிட் வீசா மூலம் வருவதற்கு அனுமதிப் பதோடு தொழில்புரிய அனுமதிப் பதாக அர்னோல்ட் மேலும் கூறினார்.



இடைத்தங்கல் நாட்டில் கிடைக்கும் பாதுகாப்பு, தங்குமிடம் மற்றும் ஏனைய வசதிகளைப் பற்றி ராஜா விசாரித்தாலும்



இதற்கு முன்னர் வெளிநாடுகளுக்கு அனுப்பி வெற்றி பெற்றவர்கள் என சிலரின் புகைப்படங்களை அர்னோல்ட் ராஜாவுக்கு காட்டினார்.

## வினா: தொழில் புரிவதற்காக வேண்டி விசிட்வீசா மூலம் ஒரு நாட்டினுள் நுழைவது சட்டபூர்வமானதா?



விடை 1: இல்லை. இம்முறை சட்ட விரோதமான தாகும். அத்தோடு ஒரு நாட்டின் குடிவரவு சட்டங்களை மீறுவதாக அமையலாம்.



விடை 2: இல்லை. விசிட் வீசா அல்லது ஒன் எரைவல் வீசா என்பது தொழில் புரிவதற்கான அனுமதியல்ல. வெளிநாடொ-ன்றில் வேலை செய்வதற்கு தொழில் புரிவ-தற்கான வீசா இருக்க வேண்டும்.

மேலுள்ள கேள்விக்கு சரியான விடையை தெரிவு செய்வதன் மூலம் நாளாந்த பரிசுக்குலுக்களில் பரிசினை வெல்லுங்கள். உங்களின் விடையை அல்லது விடைகளை கீழ் குறிப் பிடப்பட்டுள்ள தகவல்களுடன் IOM நிறுவனத்தின் 0774410086 என்ற நேரடி இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்.
விடைகளை SMS அல்லது வட்சப் அல்லது வைபர் மூலமாக 0774410086 என்ற இலக்கத்திற்கு அனுப்ப முடியும். S2 என்ற குறியீட்டை தவறாமல் குறிப்பிடவும்.


S2 விடை எண்(கள்), பிரசுரமான திகதி, பத்திரிகையின் பெயர்
பால்: ஆண் / பெண், வயது, ஊர் – மாவட்டத்தின் பெயர்
உதாரணம்: S2 3,4 22.03.2021 – உதயன், ஆண் 20 சிலாபம் – புத்தளம் மாவட்டம்.

**விடைகள் 07.04.2021 திகதி வரை மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.**

**பாதுகாப்பான மற்றும் முறையான புலம்பெயர்வு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இச்சித்திரக்கதை IOM நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.**

**புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனம் (IOM)**
9ஆம் மாடி, IBSL கட்டிடம்,
80A, எல்விடிகலை வீதி, பொறல்லை, கொழும்பு 8.



# கொரோனாவில் சீனாவை பின்தள்ளியது இலங்கை!

கொழும்பு, மார்ச் 23

கொரோனா வைரஸின் பிறப்பிடமாகக் கருதப்படும் சீனாவில் பதிவாகியுள்ள கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையை விடவும் இலங்கையில் அதிக அளவானவர்களுக்கு வைரஸ் தொற்றியுள்ளது. சீனாவில் தொற்றாளர்களின்எண்ணிக்கைகுறைவடைந்துள்ள நிலையில், இலங்கையில் நாளாந்தம் சராசரியாக 300 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். சீனாவில் 2020 டிசெம்பர் முதல் நேற்றுக் காலை வரை 90 ஆயிரத்து 106 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது.

இதில் 85 ஆயிரத்து 309 பேர் குணமடைந்துள்ளனர். 4 ஆயிரத்து 636 பேர் உயிரிழந்துள்ளனர். குணமடையும் வீதம் 95 ஆகவும், மரண வீதம் 5 ஆகவும் காணப்படுகின்றது. அதேவேளை, இலங்கையில் நேற்றுக் காலைவரை கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 90 ஆயிரத்து 200ஆக பதிவாகியுள்ளது. 86 ஆயிரத்து 759 பேர் குணமடைந்துள்ளனர். (ம-44)

### ரஞ்சனுக்கு தண்டனை;

# மீள் பரிசீலனை மனு நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 23

ரஞ்சன் ராமநாயக்கவின் தண்டனையை மீள்பரிசீலனை செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர்நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டனை விதிக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவுக்கான தீர்ப்பை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி அவரது சட்டத்தரணிகளால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே அது நிராகரிக்கப்பட்டது. (ப)

# துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த கோரிக்கை

மரண தண்டனைக் கைதி துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்ய வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்கல்களுக்குட்பட்டவர்கள் அனைவருக்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என கிராமிய, பிரதேச குடிதண்ணீர் வழங்கல் கருத்திட்ட இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார். நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டமை தொடர்பில் சந்தேகம் உள்ளது. தீர்வு வழங்கப்பட முன்னர் அரசியல்வாதிகள் நீதிமன்றத் தீர்ப்பு குறித்து கலந்துரையாடியமை தொடர்பில் குரல் பதிவுகள் வெளியாகின. துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என ஆளும் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் ஜனாதிபதியிடம் எழுத்து மூலமாக கோரிக்கை விடுத்துள்ளார்கள். அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சமர்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கல்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அனைவருக்கும் நியாயம் வழங்கப்படும் அத்துடன் அரச அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியவர்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (வ-இ)



# எம்.சி.சி. உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடாது!

### நீதிமன்றுக்கு அரசு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

எம்.சி.சி. உடன்படிக்கையில் இலங்கை கைச்சாத்திடாது என்று சட்டமா அதிபர் உச்ச நீதிமன்றத்துக்கு நேற்று அறிவித்தார். மைத்திரி - ரணில் அரசு எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை கோத்தாபய தரப்பினர் அன்று கடுமையாக எதிர்த்தனர்.

இதையடுத்து தாம் ஜனாதிபதியானால் குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படமாட்டாது என்று கோத்தாபய தமது பரப்புரையில் குறிப் பிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே எம்.சி.சி. உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படமாட்டாது என்ற அறிவிப்பு தற்போது அரசால் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விபத்தும் கொலையே!

பசறையில் இறுதிச் சனியன்று இடம்பெற்ற விபத்திலிருந்து இன்னும் இலங்கை மீளவில்லை. சுமார் 200 அடி ஆழமுடைய பள்ளத்தில் பேருந்து வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 15 பேர் உயிரிழந்தனர். 30 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர். 16 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரே விபத்தில் அதிக உயிர்கள் பறிபோன துர்ச்சம்பவமாகப் பதிவாகியுள்ளது பசறை விபத்து.

இதனை வெறும் விபத்து என்ற கோணத்தில் மட்டும் கடந்துவிட முடியாது. இது திட்டமிடப்படாத – பழி உணர்ச்சிகொண்டு மேற்கொள்ளப்படாத கொலை. இந்தக் கொலையுடன் பலர் தொடர்புடையவர்களாக உள்ளனர். அவர்கள் அனைவரும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

குறித்த வீதியில் வீழ்ந்து கிடக்கும் பாறை ஒன்றால்தான் மேற்படி விபத்து ஏற்பட்டிருக்கின்றது என்பது, அந்தப் பகுதியிலிருந்து விபத்துத் தொடர்பில் கிடைத்துள்ள மறைகாணி காணொலிகள் மூலம் அறியக் கிடைக்கின்றது. விபத்து இடம்பெற்ற பகுதியில் இரு வாகனங்கள் விலகிச் செல்லக் கூடிய வழியை அங்கு வீழ்ந்து கிடந்த பெரும்பாறை அடைத்துக் கிடக்கின்றது.

அது அகற்றப்பட்டிருப்பின் இந்த விபத்து நேர்ந்திருக்காது என்பதுதான் அந்தப் பகுதி மக்களின் குற்றச்சாட்டாகவும் உள்ளது. அந்தப் பாறை சுமார் ஆறு மாதங்களாக அந்தப் பகுதியில்தான் உள்ளது. இது போக்குவரத்துக்குத் தடையாக உள்ளது என்பதை வீதி அபிவிருத்தி அதிகார சபை இனங்கண்டு அதை அகற்றியிருக்க வேண்டும். குறித்த சபையினர் இது விடயத்தில் தமது கடமையை சரிவரச் செய்யத் தவறியுள்ளனர் என்பதே உண்மை. அத்துடன், பாறையின் ஆபத்தை உணர்ந்து வீதியின் ஆபத்துத் தொடர்பில் வீதியில் எச்சரிக்கைக் குறிப்புக்கள் வைத்திருந்தால்கூட இந்தப் பேரிடர் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

அத்துடன் இது, வெறுமனே வீதி அதிகார சபையின் மீது பாரத்தைப் போட்டுவிட்டுக் கடந்து செல்லக்கூடிய விடயமும் அல்ல. மூன்று வளைவுகளைக் கொண்ட குறித்த பாதையின் பேராபத்து நிலையை இரு சாரதிகளும் உணர்ந்து செயற்பட்டிருந்தால் இன்று அந்தப் 15 பேரும் உயிருடன் இருந்திருப்பார்கள். சாரதிகளின் கவனக் குறைவால் நாம் எம் அன்புக்குரியவர்களைப் பறிகொடுப்பது இதுவொன்றும் புதிதல்ல. எக்கச்சக்கம் உதாரணங்கள் எம்முன் கொட்டிக் கிடக்கின்றன. ஆனபோதும் விபத்துக்கள் இடம்பெற்றுக்கொண்டுதான் உள்ளன. இன்னுமின்னும் கலக்கமடையச் செய்யும் வகையில், இறப்புக்களை ஏற்படுத்தும் வகையில் மேற்படி விபத்துக்கள் மாறிவருகின்றன. மன்னாரில் அண்மையில் இடம்பெற்ற ரயில் பஸ் விபத்தில்கூட பஸ் சாரதியின் கவனக்குறைவுதான் முதன்மைக் காரணம் என்று சுட்டப்பட்டமை பலருக்கும் நினைவிருக்கலாம்.

சாரதி அனுமதிப் பத்திர நடைமுறைகளில் அரசால் புதிய விதிமுறைகள் கொண்டுவரப்படவுள்ளன என்று அறியக்கிடைக்கின்றது. பயணிகள் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகளுக்கு கூடுதல் தகைமை மற்றும் பயிற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இது ஒரு சிறந்த திட்டம். எத்தனையோ நாடுகளில் நடைமுறையில் உள்ள இந்தத் திட்டத்தை இலங்கையில் முன்னதாகவே நடைமுறைப் படுத்தியிருந்தால் இன்று பல அன்புக்குரியவர்களை இழந்திருக்க வேண்டிய துர்ப்பாக்கியம் நேர்ந்திருக்காது.

பயணிகள் போக்குவரத்து விடயத்தில் கூடுதல் அக்கறையுடன்கூடிய கூட்டுமுயற்சி இலங்கைக்குத் தேவை. அதை எவ்வளவுக்கெவ்வளவு விரைந்து இலங்கை நடைமுறைப்படுத்துகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு பசறை விபத்து போன்ற விபத்துக்களைத் தவிர்க்கலாம்.







### ரயில் – பஸ் விபத்தில்

# உயிரிழந்த மாணவனுக்கு நீதிகோரி ஆர்ப்பாட்டம்!

மன்னாரில் நேற்று முன்னெடுப்பு

**மன்னார், மார்ச் 23**

**மன்னாரில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த மாணவனுக்கு நீதி கோரி நேற்று திங்கட்கிழமை தலைமன்னார் பியர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சர்வ மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள ரயில் கடவையில் கடந்த 16 ஆம் திகதி ரயிலுடன் பஸ் மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது தரம் 9 இல் கல்வி கற்கும் பாலச்சந்திரன் தருண் என்ற மாணவன் உயிரிழந்ததோடு, 25 பேர் காயமடைந்தனர்.

இந்த விபத்து தொடர்பில் நீதி கோரி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தலைமன்னார் பியர் பகுதியில் உள்ள புகையிரத கடவை வரை பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர்.

போராட்டம் இடம் பெற்ற பகுதிக்கு வந்த மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல், மன்னார் பிரதேச செயலாளர் , ரயில் திணைக்கள அதிகாரி ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களோடு கலந்துரையாடினர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் ரயில் கடவைக்கான தடையை புதிதாக அமைத்து, அதற்கான பாதுகாப்பு ஊழியரை புதிதாக நியமிக்கக் கோரியும், புகையிரதக் கடவையில் பொலிஸாரின் கண்காணிப்பு இடம்பெற வேண்டும் என்றும் கோரிக்கையை முன்வைத்தனர்.

குறித்த கோரிக்கைகளை நிவர்த்தி செய்ய உடனடியாக துரித நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களிடம் மாவட்டச் செயலர் உறுதியளித்தார். இந்த நிலையில் ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது. (ஐ-56,213,60)

## விபத்துக்களை தவிர்க்க புதிய சாரதிய பத்திரம்

கொழும்பு, மார்ச் 23

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்குடன் புதிய சாரதி அனுமதிப்பத்திரம் அறிமுகம் செய்யப்படும் என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

இனிவரும் காலத்தில் கனரக வாகனங்களின் சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் கொண்டவர்கள், பயணிகள் பேருந்தைச் செலுத்துவதற்கான அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொண்டால் மாத்திரம் பயணிகள் பேருந்தைச் செலுத்த முடியாது. இதனால் விசேட சாரதிய அனுமதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது. அந்தச் சாரதிகளுக்கு இரண்டு வாரங்களுக்கு விசேட பயிற்சிகள் வழங்கப்படும் -என்றார். (ப)

## தலையில்லாத சடலம்; விசாரணைகள் முடிவுக்கு

கொழும்பு.மார்ச் 23
கொழும்பு டாம் வீதியில் பயணப் பையில் இருந்து மீட்கப்பட்ட தலை துண்டிக்கப்பட்ட சடலம் தொடர்பான விசாரணைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் தலையைத் தேடி தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுக்கப்போவதில்லை என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் தற்கொலை செய்துள்ளதால், விசாரணை நடவடிக்கைகள் நிறுத்தப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி குருவிட்டை தெப்பனாவ பகுதியைச் சேர்ந்த 30 வயதான திலினி யசோதா ஜயசூரிய மெனிகே என்பவரின் சடலம் பயணப் பை ஒன்றுக்குள் இருந்து கடந்த முதலாம் திகதி மீட்கப்பட்டது.

இந்த நிலையில் பெண் எவ்வாறு மரணித்தார் என்பதை உறுதியாகக் கண்டறிய, அவரது தலைப்பகுதி அவசியம் என்று கொழும்பு விஷேட சட்ட மருத்துவ அதிகாரி அறிவித்திருந்தார். அதனால் அவரது தலையைத் தேடி விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன. பெண் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், சந்தேக நபரான உப பொலிஸ் பரிசோதகரும் தற்கொலை செய்துள்ளார். இந்த நிலையில் விசாரணைகள் நிறுத்தப்பட் டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-இ)

## வாகன ரயர்கள் பரிசோதனை

# தேய்ந்திருந்தால் ரூ.3,500 தண்டம்!

**நேற்று முதல் நடைமுறை என்று பொலிஸ் பேச்சாளர் எச்சரிக்கை**



**கொழும்பு, மார்ச் 23**
**இன்று முதல் வாகனங்களின் ரயர்களின் தரம் குறித்து, ஆய்வு செய்ய மூன்று நாள் நடவடிக்கையைத் தொடங்க பொலிஸார் முடிவு செய்துள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அபாயகரமான சாலை விபத்துக்களைக் குறைப்பதற்காக வாகனங்களின் ரயர்களை ஆய்வு செய்ய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வீதி விபத்துக்கள் காரணமாக நாட்டில் கடந்த 24 மணி நேரத்தில் எட்டு இறப்புகள் பதிவாகியுள்ளன. தினமும் ஒன்பது முதல் பத்து இறப்புகள் பதிவாகின்றன, அதே நேரத்தில் 30 முதல் 40 நபர்கள் பொறுப்பற்ற விதத்தில் வாகனம் ஓட்டுதல் மற்றும் தரமற்ற வாகனங்களின் பயன்பாடு காரணமாக காயங்களுக்கு ஆளாகின்றனர். எனவே அதிகாரிகள் இன்று (நேற்று) முதல் வாகனங்களின் ரயர்களை ஆய்வு செய்வார்கள். தரமற்ற ரயர்களுடன் வாகனங்களை ஓட்டும் நபர்களுக்கு 3,500 ரூபா அபராதம் விதிக்கப்படலாம். தகுதியற்ற வாகனங்களைச் செலுத்தி, காயங்களை ஏற்படுத்துபவர்களுக்கு 25 ஆயிரம் ரூபா மேலதிகமாக அபராதம் விதிக்கப்படலாம் என்றார். (ம-ப)

## ஹொட்டலில் தாக்குதல்; ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 23
குருநாகல் பகுதியில் ஹொட்டல் ஊழியர்கள் இருவரின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றைய ஊழியர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

குருநாகல் நகரத்தில் அமைந்துள்ள ஹொட்டல் ஒன்றுக்கு, நேற்றுமுன்தினம் மாலை வந்த நபரொருவர் அதன் ஊழியர்கள் மீது கண்ணாடிப் போத்தலால் தாக்கி காயப்படுத்தியுள்ளார் என்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன்போது , ஹோட்டலுக்கு வந்த சந்தேக நபர் ஹொட்டல் ஊழியர்களிடம் முரண்பாட்டை ஏற்படுத்திக் கொண்டுள்ளதுடன் , பின்னர் கண்ணாடிப் போத்தலால் இரு ஊழியர்களைத் தாக்கியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ப)

கட்டார் கட்டட நிர்மாணத்தில்

## இலங்கையர்கள் 557 பேர் சாவு

கொழும்பு.மார்ச் 23
கட்டாரில் கடந்த 10 வருடங்களில் இடம்பெற்ற கட்டட நிர்மாணப் பணிகளின்போது, இலங்கையர்கள் 557 பேர் உயிரிழந்துள்ளனர் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

அதிக உஷ்ணம் நிறைந்த சூழலில் உயரமான இடங்களில் பணியாற்றிய இவர்கள், தவறிவீழ்ந்து உயிரிழந்த சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

இது தொடர்பில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனியவிடம் வினவிய போது, இந்த அறிக்கை தொடர்பில் கட்டார் அரசுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். மிக விரைவில் இது தொடர்பில் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிப்போம்- என்றார். (க-இ)

## ஜே.வி.பியின் பெயரில் போலி முகப்புத்தகக் கணக்கு

### குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாடு

கொழும்பு. மார்ச் 23
ஜே.வி.பி. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்' என்ற பெயரில் போலியான முகப்புத்தகக் கணக்கு உருவாக்கப்பட்டு அதன் ஊடாக போலிச் செய்திகள் பரப்பப்படுகின்றன என்று தெரிவித்து நேற்றுமுன்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ மற்றும் சட்டத்தரணி சுனில் வடகல ஆகியோரால் குற்றப்புலனாய்வு பிரிவில் முறைப்பாட ளிக்கப்பட்டுள்ளது.

கிராமத்துடன் கலந்துரையாடல் செயற்றிட்டம் ஒன்றில் கடந்த சனிக்கிழமை கலந்து கொண்ட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச,


'ஜே.வி.பி. சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்' என்ற முகப்புத்தகக் கணக்கில் சுற்றுச்சூழல் அழிப்பு தொடர்பாக போலியான செய்திகள் வெளியிடப்படுகின்றன என்று தெரிவித்திருந்தார். இந்த முகப்புத்தகக் கணக்கு தொடர்பிலேயே குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடளிக்கப்பட் டுள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ;

இந்த முகப்புத்தகக் கணக்குக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

இந்தக் கருத்தை கோத்தாபய ராஜபக்ச என்ற தனியொரு நபர் தெரிவித்திருந்தால் நாம் முறைப்பாடளித்திருக்க மாட்டோம்.

எனினும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி நாட்டு மக்கள் மத்தியில், ஊடகங்கள் மத்தியில் இவ்வாறான கருத்தை தெரிவித்தமையால் நாம் முறைப்பாடளித்துள்ளோம் -என்றார். (ப)





## போலி நாணயத் தாள்கள் மீட்பு

மட்டக்களப்பு, மார்ச் 23
5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களுடன் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடிப் பகுதியில், சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தனஞ்ஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினருடன் இணைந்து மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளார். ஓட்டமாவடி பிரதேசத்திலுள்ள வியாபார நிலையம் ஒன்றே இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டு சோதனை செய்யப்பட்டது. ஒரு லட்சம் ரூபா பெறுமதியான 5ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள்அங்கு மீட்கப்பட்டன. வியாபார நிலையத்தில் கடமையாற்றிய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

"பிரதேசத்தில் வேறு போலி நாணயத்தாள்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்திலும், இதனுடன் வேறு வியாபாரிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்திலும் சில வர்த்தக நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

போலி நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்ட வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் தலைமறைவாகியுள்ளார்" என்று வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ப)

## தேயிலை உற்பத்தி 23 சதவீதம் அதிகரிப்பு

கொழும்பு.மார்ச் 23
கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து,இலங்கையின் தேயிலை உற்பத்தி 23 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. பெப்ரவரி மாதத்திலிருந்து நாட்டில் தேயிலை உற்பத்தி 22.3 மில்லியன் கிலோ கிராமாகப் பதிவாகியுள்ளது. அதேவேளை கடந்த வருடம் 18.2 மில்லியன் கிலோ கிராமாக பதிவாகியிருந்தது. ஜனவரி மற்றும் பெப்ரவரி ஆகிய இரு மாதங்களுக்குள் இலங்கையிலிருந்து 44 மில்லியன் கிலோ கிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. (க-இ)

# அரசியல் சூழ்ச்சியால் ஆட்சியை மாற்ற இயலாது

## அமைச்சர் விமல் வீரவன்ச வீறாப்பு



**கொழும்பு, மார்ச் 23**
**2014 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த குறிப்பிடப்பட்ட அனைத்துக் குற்றச்சாட்டுக்களும் தற்போது இரண்டாம் பாகமாக தோற்றம் பெற்றுள்ளன. அரசியல் சூழ்ச்சியால் ஆட்சி மாற்றத்தை இனியொருபோதும் ஏற்படுத்த முடியாது என கைத்தொழில் வளங்கள் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர்;
பல்வேறு சவால்களுக்கு மத்தியில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் பலமான அரசு தோற்றம் பெற்றுள்ளது. கொவிட் 19 வைரஸ் தாக்கம் குறுகிய காலத்தில் பெரும் சவால்களை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த திட்டமிடலின் ஊடாக அனைத்துச் சவால்களும் வெற்றி கொள்ளப்பட்டு நாடு தற்போது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளது. அரசியல் மற்றும் சமூகக் களத்தில் காடழிப்பு விவகாரம் இன்று பிரதான பேசுபொருளாகக் காணப்படுகிறது. வெளிநாடுகளில் அழிக்கப்பட்டுள்ள காடுகளின் புகைப்படங்களைக் கொண்டு தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. வில்பத்து காடு அரசியல் வாதிகளால் திட்டமிட்டு அழிக்கப்படும் போது அதற்கு ஆதரவாக செயற்பட்டவர்கள் இன்று இயற்கையைப் பாதுகாக்கும் சூழலியலாளர்களாக அரசுக்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள். வனப்பகுதிகளை அண்மித்த பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும்போது அதனையும் சுற்றுச் சூழல் அழிப்பு செயற்பாடு என போர்கொடி தூக்குகிறார்கள். ஜனாதிபதியின் கிராமத்துடனான உரையாடல் செயற்றிட்டத்தை பலவீனப்படுத்தும் வகையில் திட்டமிட்ட வகையில் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன- என்றார். (ப)




# பல் மருத்துவர்கள் வேலைநிறுத்தம்

வவுனியா, மார்ச் 23
நாடாளாவிய ரீதியில் பல் மருத்துவர்களால் நேற்று முன்னெடுக்கப்பட்ட வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு வவுனியா அரச பல் மருத்துவ அதிகாரிகள் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது. அந்தவகையில் வவுனியா பொது மருத்துவமனையில் நேற்றுக் காலை தொடக்கம் பல் மருத்துவர்கள் கடமைக்கு சமுகமளிக்காமல் அடையாள வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
எனினும் அவசர சிகிச்சைகள் முன்னெடுக்கப்பட்டன. இலங்கை பல் மருத்துவ சேவைக்கு எதிரான சதிகளை முறியடிக்கும் வகையில் குறித்த அடையாள பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-110)

# பசறையில் மீண்டும் விபத்து பெண் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 23
பசறை தொழும்புவத்தை 3ஆம் கட்டை பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். பசறையிலிருந்து படல்கும்புர நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று எதிர்த் திசையில் வந்த சிறிய ரக பாரவூர்தியுடன் மோதுண்டதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.
ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் பயணித்த முச்சக்கரவண்டியே இவ்வாறு விபத்துக்குள்ளானது. அதில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன்மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் காயமடைந்தவர்கள் பசறை மற்றும் பதுளை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பசறை பொலிஸார் முன்னெடுத்தனர். (ப)



# அகதிகள் முகாமில் அறுவருக்கு கொரோனா

கொழும்பு,மார்ச் 23
ஆவஸ்திரேலியாவில் பப்புவா நியூ கினியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளில் 6 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
அந்தத் தீவில் சுமார் 90 அகதிகளும், 40 தஞ்சக்கோரிக்கையாளர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.
அகதி ஒருவர், வயிற்றுவலிக்கான மருத்துவ சிகிச்சைக்குச் சென்ற போது, அவருக்கு கொரோனாத் தொற்றுக் கண்டறியப்பட்டுள் ளது.
இவர் அமெரிக்காவில் மீள்குடியேறுவதற்கான வாய்ப்பை எதிர் நோக்கிக் காத்திருக்கும் அகதி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் கடுமையான எல்லைப் பாதுகாப்பு கொள்கையை நடைமுறைப்படுத்தி வரும் ஆஸ்திரேலியா அரசு, படகு வழியாக தஞ்சமடைய முயன்றவர்களை சுமார் 8 ஆண்டுகளாக சிறைப் படுத்தி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சு-இ)

# தீர்வு கிடைக்கக் கூடிய சூழ்நிலை உருவாகிறது

## மட்டு. எம்.பி கருணாகரம் தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச் 23
வடக்கு கிழக்குக்கு தீர்வு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது என்று மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் தவிசாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.
நேற்றுமுன்தினம் முல்லைத் தீவில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
தற்போதைய நிலையில் அரசியலில் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கக்கூடிய சூழ்நிலை உருவாகிக்கொண்டிருக்கின்றது. மாகாணசபைத் தேர்தல் மிக விரைவில் வரக்கூடிய நிலையில், ஐக்கியநாடுகள் சபையில் மனித உரிமைகள் ஆணையக கூட்டத்தொடர் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. இலங்கை சம்மந்தமான விடயங்கள் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
இலங்கையில் நடைபெற்ற அநியாயங்களுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் இனிமேல் இப்படியான பிரச்சினை நடக்காமல் நிரந்தரமான அரசியல் தீர்வு கிடைக்கவேண்டும் என்ற விதத்தில் பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது இலங்கைக்கு எதிராக ஒரு பிரேரணை வர இருக்கின்றது
இது குறித்து இந்தியா கூடுதலான கவனம் எடுத்து தமிழ் மக்களின் அநியாயங்களுக்கு நீதியும் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பூரண அதிகாரங்களும் வழங்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கலுடன் சேர்ந்த மாகாண சபை உருவாக வேண்டும் என்று அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்- என்றார். (மு-19)



# சி.ஐ.டி.யில் ராஜித முன்னிலையானார்

கொழும்பு, மார்ச் 23
ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மற்றும் அவரது மகனான, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சத்துர சேனாரத்ன ஆகியோர் நேற்றைய தினம் வாக்குமூலம் வழங்குவதற்காக கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவில் ஆஜராகியுள்ளனர்.
தன்னை கடத்திச் சென்று தாக்குதலுக்கு உட்படுத்தினர் என ஊடகவியலாளர் ஒருவர் வழங்கிய முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்கவே அவர்கள் இவ்வாறு ஆஜராகியுள்ளனர். ஊடகவியலாளரின் அந்த முறைப்பாடு போலியானது என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# பொலிஸ் நிலையத்துக்குள் மனைவி மீது அசிட் வீச்சு

## கணவர் கைது

பொலிஸ் நிலையத்தினுள் வைத்து தனது கணவனால் மேற்கொள்ளப்பட்ட அசிட் தாக்குதலால் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான பெண் ஒருவர் காலி கராப்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். உடுகம பொலிஸ் நிலையத்தினுள் வைத்து நேற்றுமுன்தினம் காலை இந்த அசிட் வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. குடும்பத் தகராறு தொடர்பான முறைப்பாடொன்றை விசாரிக்க மேற்படி தம்பதி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டிருந்தபோதே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. அசிட் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவரும் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். சந்தேக நபரான கணவர் கைது செய்யப்பட்டு உடுகம நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் (ப)

# இன்றைய நாள்

**மேடம்:** நேர்மறை எண்ணங்களால் மற்றவர்களைக் கவர்வீர்கள். மனம் மகிழும். குடும்பத்தில் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். கணவன், மனைவிக்கு இடையில் வாக்குவாதம் வேண்டாம்.

**இடபம்:** இன்று சிலர் புது வீடு கட்ட ஆரம்பிப்பீர்கள். திருமணம் சம்பந்தப்பட்ட முயற்சிகள் சாதகமாக முடியும். புதுத் தெம்பு பிறக்கும். சொத்து விவகாரம் சுமுகமாகத் தீரும்.

**மிதுனம்:** பெண்கள் வாக்குறுதி கொடுப்பதை தவிர்ப்பது நல்லது. கணவரின் போக்கு மகிழ்ச்சி தரும். வருமானம் கூடும். காலநேரம் பார்க்காமல் உழைக்க வேண்டி வரும்.

**கடகம்:** பணியிடத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் நன்மை வரும். எதிலும் நிதானமாகச் செயற்பட்டு நன்மை அடைவீர்கள். கவலை நீங்கும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்:** பணவரவு உண்டு. முயற்சிகளில் முன்னேற்றம் காணப்படும். மேலதிகாரியிடம் சரிசமமாகப் பேசும் வாய்ப்புக் கிடைத்து மகிழ்வீர்கள். பணியில் இருந்து வந்த தடை, தாமதங்கள் நீங்கும்.

**கன்னி:** பழுதான மின்சார சாதனங்களைச் சரி செய்வீர்கள். உங்களின் எதிர்காலத் திட்டங்களை விரிவுபடுத்துவீர்கள். வேலையாட்களைத் தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள்.

**துலாம்:** முடிவுகள் எடுப்பதில் தடுமாற்றம் வந்து பின் தெளிவீர்கள். கவலை தீரும். பிள்ளைகளிடம் அதிக கண்டிப்பு காட்ட வேண்டாம். பணத்தட்டுப்பாடு வந்து நீங்கும். மனம் மகிழும்.

**விருச்சிகம் :** வீடு வாங்குவதில், விற்பதில் லாபம் வரும். மனம் மகிழும். பிரச்சினையில் மாட்டாமல் அமைதியாக ஒதுங்கினால் நல்லது. கவனமாகச் செயற்பட்டால் பிரச்சினை வராது.

**தனுசு:** உங்களின் அறிவுத்திறனால் நன்மைகளைக் காணப்போகிறீர்கள். விலகிச் சென்ற பழைய நண்பர்கள் மீண்டும் வந்திணைவர். அலுவலகத்தில் உங்களைப் பற்றிக் குறை கூறியவர்கள் மாறுவர்.

**மகரம்:** உடல் நிலையில் இருந்த பிரச்சினை சரியாகும். வெளிநாட்டில் இருந்து பரிசுகள் உங்களைத் தேடி வரும். பொழுது போக்கு விஷயங்களில் ஈடுபட முடியாது.

**கும்பம்:** சுபச்செலவுகள் ஏற்படும். கலை ஆர்வம் வரும். நண்பர்களை சந்திப்பதால் மனதில் புதிய உற்சாகம் பிறக்கும். பணியிடத்தில் வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும்.

**மீனம்:** இளைஞர்கள் வாழ்வில் உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். வெளியூரில் உள்ள பிள்ளைகளிடம் இருந்து நற்செய்தி வரும். உறவினர், நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

# தவக்கால சிந்தனை

## மனிதத்துக்காக மதமா? மதத்துக்காக மனிதனா?

நான் சார்ந்த மதம் சரியில்லை அதனால் மாறிக்கொள்கிறேன். மதப் பணியாளர்கள் சரியில்லை. ஆகவே வேற்று மதத்துக்கு மாறிக்கொள்கின்றேன். வசதி வாய்புகளுக்காக தொழிலுக்காக பணத்துக்காக மதம் மாறினேன். இதுவே மதம் விட்டு மதம் மாறுபவர்கள் கூறும் நொண்டிச்சாட்டு.

மதம் மாறுதல் என்பது போதனைகள், கொள்கைகள் நெறிமுறைகள், இறைவரங்கள் என்பவற்றால் தன்னிச்சையாக ஈர்க்கப்பட்டு இணைவதாகும். ஏனைய மதங்களை குறை கூறி பணத்தை அள்ளி வீசி தப்பறையான கதைகள்கூறி மதம் மாற்றுதல் கட்டாய மதம் மாற்றுதல் ஆகும். மத நம்பிக்கை என்பது மதபோதகர்களின் நடத்தையைப் பொறுத்ததல்ல. அது ஒவ்வொரு மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள உயர்பிணைப்பு மற்றும் உறவாடல் ஆகும்.

வன்முறை மதமாற்றங்கள் கட்டாய மதமாற்றங்களை எதிர்த்து கத்தோலிக்க திருச்சபையில் அன்று தொட்டு இன்றுவரை பல்லாயிரம் மறைசாட்சிகள் தம் உயிரைக்கொடுத்து புனித நிலையடைந்துள்ளனர்.

மதங்களின் பெயரால் மோதிக்கொள்வதும் அரசியல் செய்வதும் இன்று அதிகரித்துள்ளது. அனைத்து மதங்களின் அடிப்படைத் தத்துவங்களும் அன்பும், மனித நேயம் இறையன்பைக் குறிப்பிடும்போது மதவாதம் பேசி என்ன பயன்? பல்வேறு வீதிகளும் ஈற்றில் தலைநகரைச் சென்றடைவதுபோல் அனைத்து மதம் சார்ந்த பக்தர்களின் முடிவிடம் ஒரே இடம் என்பதை உணர் வோம்.

மதங்களின் பெயரால் மோதுவதை கட்டாய மதமாற்றத்தை விடுத்து மனித மாண்புகளுக்காக ஒன்றிணைந்து போராடுவோம். மனிதத்துக்காக மதமா? மதத்துக்காக மனிதனா?. சிந்திப்போம்.

**எஸ்.யேசுதாஸ்**
கொழும்புத்துறை.

# சிங்கராஜ வனத்துக்குள் இரு பெரும் நீர்நிலைகள்

## சீனாவுடன் இணைந்து திட்டமாம்

கொழும்பு, மார்ச் 23

சிங்கராஜ வனத்துக்குள் இரண்டு பெரும் நீர்நிலைகள் அமைக்கப்படவுள்ளன. இதற்காக சீன நிறுவனத்துடன் இணைந்து திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது என்று அமைச்சர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அம்பாந்தோட்டை மாவட்டத்தின் தங்காலை, வீரகெட்டிய மற்றும் பெலியத்த பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் பெற்றுக் கொள்ளும் முகமாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட உள்ளது. மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டு சீன நிறுவனத்துக்கு ஒருதொகை நிதி



யும் வழங்கப்பட்டிருந்தது. கடந்த ஐந்து வருடங்களில் அது செயற்படுத்தப்படவில்லை. அத்திட்டத்தை மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். சிங்கராஜ வனத்துக்குள் ஒரு நீர்நிலை சுமார் 5 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்பட உள்ளது. இவ்வாறு இரண்டு நீர்நிலைகள் அமைக்கப்படவுள்ளன. இதன்போது இடம்பெறும் வன அழிவுக்கு பதிலாக 50 தொடக்கம் 100 ஏக்கரில் மரம் நடுவதற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம் என்றார். (ப)

# உள்ளூர் துப்பாக்கி மீட்பு: விவசாயி ஒருவர் கைது

மட்டக்களப்பு, மார்ச் 23

மட்டக்களப்பு வவுணதீவு, காந்தி நகர் பகுதியில் சட்டவிரோதமாக உள்ளூர் துப்பாக்கியை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் விவசாயி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில், காந்திநகர் பகுதியிலுள்ள விவசாயின் வீடு சுற்றி வளைக்கப்பட்டு, திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது குறித்த வீட்டுக்கு அருகில் இருந்த மரங்களுக்கு கீழே, பொலித்தீனால் சுற்றி ஒளித்து வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த துப்பாக்கியை பொலிஸார் மீட்டுள்ள னர். சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற 42 வயதான விவசாயி கைது செய்யப்பட்டார். அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ப)

# போலியான குற்றச்சாட்டுக்களால் அரசைப் பலவீனப்படுத்த முயற்சி

## வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23


எதிர்க்கட்சியினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து அரசைப் பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. அபிவிருத்தி பணிகளை முன்னெடுக்கும் போது இயற்கை வளங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. காடழிப்புத் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் முறையான விசாரணைக்கு உட்படுத்தப்படும் என வன ஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் சி.பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரச அதிகாரத்துடன் வனப்பகுதிகள் அழிக்கப்படுகின்றன என்று முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு எதிர்த் தரப்பினர் போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார்கள். இவ்வாறான குற்றச்சாட்டுக்களால் அரசைப் பலவீனப்படுத்த முடியாது. வனப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கும் போது இயற்கை வளங்களுக்குப பாதிப்பு ஏற்படுகிறது. அபிவிருத்திப் பணிகளின்போது இயற்கை வளங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்றிட்டங்களை முன்னெடுக்க உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. சுபீட்சமான எதிர்காலக் கொள்கைத் திட்டத்தில் இயற்கை வளங்களைப் பாதுகாக்க பல செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. வனப்பகுதிகளை 30 வீதத்தால் அதிகரிக்க நாடு தழுவிய ரீதியில் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பல வனப்பகுதிகள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி களாக அடையாளப்படுத்தப்பட்டு அதற்கான [illegible] அறிவித்த [illegible] ன. [illegible]



# அடிப்படைவாதமும் இனவழிப்பும்



சந்திரசேகர ஆசாத்

இஸ்லாமிய அடிப்படைவாதத்திலிருந்து பௌத்த மதத்தையும், பௌத்த மக்களையும் காப்பாற்றும் முகமாக பொதுபல சேனாவின் பொதுசெயலாளர் ஞானசாரதேரர் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஒரு பெரும் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாக அறிவிப்பு விடுத்துள்ளார்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகளான 'சஹ்ரான்' குழுவினர் தேவாலயங்கள் உட்பட எட்டு இடங்களில் நடத்திய பயங்கரவாதத் தாக்குதல் காரணமாக 250க்கு மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 500க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர் இது ஒரு வெறுக்கத்தக்க பயங்கரவாத நடவடிக்கை என்பதில் எள்ளளவும் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

அதையடுத்து அத்துரலிய தேரர் தலைமையில் இடம்பெற்ற ஒட்டுமொத்த முஸ்லிம்களுக்கு எதிரான பேரணியும், அவர் நடத்திய சத்தியாக்கிரக போராட்டமும், ஞானசார தேரர், ரத்தின தேரரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் முழு நாடுமே குழம்பும் எனச் சவால் விட்டு இனத்துவேசத்தைத் தூண்டிவிட்டமையும் நாட்டில் பெரும் அமைதியின்மையை ஏற்படுத்தின. மேல் மாகாணத்தின் ஒரு பகுதியிலும், வடமேல் மாகாணத்திலும் முஸ்லீம்களின் வர்த்தக நிலையங்கள் சூறையாடப்பட்டு எரியூட்டப்பட்டன.



முஸ்லிம் மக்கள் வீதியில் நடமாடவோ, வீட்டில் பாதுகாப்பாக இருக்கமுடியாதளவுக்கு வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இத்தகைய மோசமான, முஸ்லீம் மக்கள் மீதான பயங்கரவாத வன்முறைகளுக்கு எண்ணையூற்றி வளர்த்த அத்துரலிய ரத்தின தேரர், ஞானசார தேரர் ஆகியோர் கட்டவிழ்த்துவிட்டது முஸ்லீம்களுக்கு எதிரான இனவெறி உணர்வு என்பதை மறுத்துவிட முடியாது.

கிழக்கு மாகாணத்தின் காத்தான்குடியைத் தளமாகக் கொண்டு இயங்கிய சஹ்ரான் குழுவினர், மேற்கொண்ட பயங்கரவாத நடவடிக்கைக்காக அவர்களுடன் எவ்வித தொடர்பையும் பேணியிராத வடமேல் மாகாண முஸ்லிம்கள் பழிவாங்கப்பட்டனர்.

இதில் முக்கியமாக இக்குண்டு வெடிப்பால் பாதிக்கப்பட்ட கத்தோலிக்க மக்கள் இவ்வன்செயல்களில் ஈடுபடவில்லை. இம் மனித குல விரோத நடவடிக்கையை மேற்கொண்டவர்கள் சிங்கள இனவெறியர்கள். பின்னணியில் நின்றவர்கள் பௌத்த அடிப்படைவாத இனவெறி அமைப்பினர்கள்.

இங்கே நாம் கவனிக்கவேண்டியது முஸ்லீம் பௌத்த அடிப்படைவாதிகளால் பாதிக்கப்பட்டது ஒரு பாவமுமறியாத அப்பாவி கத்தோலிக்க மக்களும், ... ம். தம்புல பள்ளிவாச... ம் பள்ளிவாசல்கள் ...பு நடவடிக்கை

கள் கொழும்பு, பேருவளை, அம்பாறை போன்ற பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறைகளின் பின்னால் பொதுபல சேனவும், ஏனைய பௌத்த மதவாத அமைப்புகளுமே இருந்தன என்பது பகிரங்கமான உண்மை. ஆனால் அவை தடுத்த நிறுத்தப்படவுமில்லை; சம்பந்தப்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கபடவுமில்லை. இவை சஹ்ரான் குழுவினரின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான ஒரு நியாயப்பாட்டை அவர்கள் முன்வைக்கக் காரணமாயிருந்தன என்பதை மறுத்துவிடமுடியாது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் பொதுபலசேனவுக்கு கட்டிடம் வழங்கி அதை திறந்து வைத்து அதை வளர்ப்பதில் பாரிய பங்களிப்பை வழங்கினார். அக்காலப்பகுதியில் ஞானசாரதேரர் தலைமையில் பொதுபலசேன அமைப்பினர் முஸ்லீம்களுக்கு எதிராக வன்முறைகளையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும் தட்டிக் கேட்க எவருமின்றி மேற்கொண்டு வந்தனர்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் போது கோத்தாபய பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது சஹ்ரான் குழுவின் உறுப்பினர்கள் சிலருக்கு புலனாய்வு பிரிவினர் மாதாந்தச் சம்பளம் வழங்கியமை தெரியவந்திருந்தது. அது மட்டுமின்றி வவுணதீவில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த இரு பொலிசாரையும் சஹ்ரானின் உதவியாளரே சுட்டுக்கொன்றார் எனவும் பொலிசாரின் நடமாட்டம் பற்றிய தகவல்களை அவருக்கு இரு இராணுவ அதிகாரிகளே வழங்கியிருந்தனர் எனவும் சில உண்மைகள் விசாரணையின் போது வெளிப்பட்டிருந்தன.

அதாவது சிங்கள பௌத்த அடிப்படைவாதிகளுக்கும், முஸ்லீம் அடிப்படைவாதிகளுக்கும் அவர்கள் ஒருவருக்கொருவர் எதிரான சக்திகளாக இருந்தும் கூட ஒரே மூலத்திலிருந்து உதவிகளும் ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டிருந்தன என்பது மறைக்கப்படமுடியாத உண்மைகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்தகால சம்பவங்கள் இப்படியாக அமைந்திருந்த வேளையில் ஏப்ரல் 21 சம்பவம் சஹ்ரான் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு பேரழிவு ஏற்படுத்தப்பட்டதும், அதைத்தொடர்ந்து சாதாரண முஸ்லீம் மக்கள் மீது சிங்கள பௌத்த இனவெறியர்களால் கொடிய வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டமையும் இடம்பெற்றன.

ஏப்ரல் 21தாக்குதல்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு இதில் உண்மையான குற்றவாளிகள் யார், அவர்களைப் பின்னணியில் நின்று இயக்கிவர்கள் யார் என்பதை இன்னமும் இனங்காணவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்த போதிலும், அது, பொதுபலசேன உட்பட்ட பௌத்த அடிப்படைவாத அமைப்புகள், முஸ்லீம் அடிப்படைவாத அமைப்புகள் என்பவை தடைசெய்யப்பட வேண்டுமெனப் பரிந்துரை செய்திருந்தது.

அந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை எதிர்த்தே ஞானசாரர் தலைமையில் பொதுபல சேன உட்பட பிக்குகளின் அமைப்புகள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் போராட்டத்தை நடத்தியுள்ளனர்.

அங்கு கருத்து வெளியிட்ட ஞானசாரதேரர் ஏப்ரல் 21 ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையைத் தாங்கள் முற்றாக நிராகரிப்பதாகவும், இது பௌத்த அமைப்புகளின் குரலை மௌனிக்க வைக்கும் நோக்கம் கொண்டதெனவும், இது உண்மையான குற்றவாளிகளை இனம் காணவில்லையெனவும் கண்டனம் தெரிவித்திருந்தார். குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு அரச தரப்பிலிருந்து எவரும் எவ்விதமான நேரடியான பதிலையும் வழங்கியதாகத் தெரியவில்லை. ஆனால் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிறல் சரத் வீரசேகர 11 முஸ்லீம் அமைப்புகள் தடைசெய்யப்படவுள்ளதாகவும், முஸ்லீம் பெண்கள் 'புர்கா' அணிவதைத் தடைசெய்ய அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், சகல முஸ்லிம் அறநெறிப்பாடசாலைகளும் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுமெனவும், பாடப்புத்தகங்களில் முஸ்லீம் அடிப்படைவாதக் கருத்துக்கள் நீக்கப்பட வேண்டுமெனவும், நாடு முழுவதும் ஒரே திருமணச்சட்டமே கடைக்கொள்ளப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அதாவது முஸ்லிம் மக்களுக்குரிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரிய தனித்துவங்கள் முற்றாகவே பிடுங்கப்பட்டு முஸ்லிம்கள் மீதான ஒரு மௌனமான இனவழிப்புக்கான முன்னறிவித்தலே இது என்பதில் சந்தேகமில்லை.

முஸ்லீம் அடிப்படைவாதத்துக்கு எதிரான போர் என்ற பேரில் முஸ்லீம்களின் தனித்துவ அடையாளங்களுக்கெதிரான ஒரு இன அழிப்புப் போர் தொடங்கப்பட்டுள்ளமை தெளிவாக்கப்பட்டுள்ளது.

ஞானசாரதேரர் தலைமையிலான பொதுபலசேன ஊட்டி வளர்க்கப்பட்டதும், சஹ்ரான் குழுவினருக்கு மாதாந்த ஊதியம் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டதும் ஒரே மையத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டமை, முஸ்லிம் அடிப்படைவாதத்தின் பேரால் முஸ்லிம்கள் மீதான இன அழிப்பை மேற்கொள்ளும் நீண்ட கால இலக்கைக் கொண்டமைந்தனவே எனவும் நம்ப வேண்டியுள்ளது.

எவ்வாறு பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகள் நியாயப்படுத்தப்படுகிறதோ அவ்வாறே முஸ்லிம் அடிப்படைவாத எதிர்ப்பு என்ற பேரில் முஸ் லிம்களுக்கு எதிரான இன அழிப்பு கட்டவிழ்த்துவிடப்படுகிறது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது பதவியேற்பு உரையில் குறிப்பிட்ட ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கோட்பாடு சிறுபான்மை இனங்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகள் மூலமே நிரைவேற்றப்படும் என்பதற்கான அறிகுறிகள் வலுவாகவே உள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து தத்தம் இனங்களுக்கான தனித்துவங்களைப் பாதுகாக்கப் போராடுவது காலத்தின் தவிர்க்கமுடியாத கட்டாயமாக உருவாகியுள்ளது.

# சட்டவிரோத மீன்பிடிக்கு அதிகாரிகளும் உடந்தை?

## முல்லை மீன்பிடி சமாசம் குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, மார்ச் 23

**முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் சட்டவிரோத முறையில் வெடிபொருளைப் பயன்படுத்தி 3 ஆயிரத்து 500 கிலோ மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. எனினும் அது தொடர்பில் அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் மரியதாஸ் பிறெற்றிக் ஜோன்சன் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது; சட்டவிரோத தொழில்களைக் கட்டுப்படுத்த வேண்டியது மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளின் பொறுப்பாகும். ஆனால் அவர்கள் அதனைச் செய்வதில்லை. சமாசத்துடன் இணைந்து பணியாற்ற முடியாது என்று எமக்குத் தெரிவித்து விட்டார்கள். அதனால் சட்டவிரோத தொழில்கள் அதிகரித்துள்ளன. நேற்றுமுன்தினம் காலையிலும் புதுமாத்தளன் கடற்பரப்பில் வெடி பொருள் பயன்படுத்தப்பட்டு 3 ஆயிரத்து 500 கிலோ பாரை மீன்களை ஒருவர் சட்டவிரோதமாகப் பிடித்துள்ளார். அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கே துணை போகின்றார்கள். நாயாற்றுப் பகுதியிலும் சுருக்கு வலை மூலம் சட்டவிரோதமாக மீன்கள் பிடிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக உடனடியாகவே கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கிய போதிலும் கையும் மெய்யுமாக பிடிபட்டாலே தாம் நடவடிக்கை எடுக்க முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர் -என்றார். (ஜ-13)



# புளியம்பொக்கணை நாகதம்பிரான்; மார்ச் 28 பொங்கல் விழா

கிளிநொச்சி,மார்ச் 23

வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பங்குனி உத்தரப் பொங்கல் திருவிழா நேற்றுமுன்தினம் விசேட வழிபாடுகளைத் தொடர்ந்து விளக்கு வைத்தல் வைபவத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு பங்குனி உத்தரப் பொங்கல் விழா நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பாரம்பரிய முறைப்படி மீசாலை புத்தூர் சந்தியில் இருந்து மடைப் பண்டம் எடுத்து வருவதற்காக மாட்டு வண்டிகளில் அடியார்கள் ஆலயத்தில் இருந்து புறப்பட்டுள்ளனர்.

இவர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி இரவு ஆலயத்தை வந்தடைந்தவுடன் பொங்கல் விழா நடைபெறும்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களே அனுமதிக்கப்படுவதுடன் நேர்த்திகளை நிறைவேற்றுபவர்கள் விரைவாக ஆலயத்தில் நேர்த்திக்கடன்களை செய்து வெளியேறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பொங்கல் காலத்தில் ஆலயச் சூழலில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கோ வெளிமாவட்டங்களில் இருந்து வருகின்ற பொதுப் பேருந்து சேவைகளுக்கோ எந்தவித அனுமதியும் வழங்கப்படவில்லை.

பொங்கல் உற்சவம் தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட முடிவுகளின் படி பொங்கல் விழா நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-இ)

# பொருண்மியம் நலிந்த குடும்பப் பெண்ணுக்கு மருத்துவ உபகரணம்

முல்லை, மார்ச் 23

தாய்த்தமிழ் பேரவையின் ஒழுங்கமைப்பில், புதுக்குடியிருப்பு கைவேலி பகுதியில் வசித்து வரும் மிகவும் பொருண்மியம் நலிந்த குடும்பம் ஒன்றுக்கு மருத்துவ உதவி வழங்கப்பட்டுள்ளது.

நீண்ட நாள்களாக சுவாசப் பிரச்சினை காரணமாக மருத்துவமனை செல்லமுடியாது கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த குடும்பப் பெண் ஒருவருக்கே இந்த மருத்துவ உதவி வழங்கப்பட்டது.

புலம்பெயர் உறவான சிவசங்கர் தர்சினியின் நிதிப்பங்களிப்பில் இந்த உதவித் திட்டம் வழங்கப்பட்டது. (ற-222)

# வாய்க்காலுக்குள் வீழ்ந்துள்ள கொங்றீட் சுவரை அகற்றுக

## விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி 4 ஆம் வாய்க்கால் பரவிப்பாஞ்சான் பகுதியில், வயலுக்கு நீர்கொண்டு செல்லும் வாய்க்காலின் இருமருங்கும் கட்டப்பட்டு தற்போது இடிந்து வீழ்ந்துள்ள கொங்றீட் தடுப்புச்சுவரை அகற்றித்தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முதன்மை வாய்க்கால்களில் சுருங்கைகளினூடாக தண்ணீர் வெளியேறி கிளை வாய்க்கால்களுக்குச் செல்லும்போது அந்த நீரின் வேகத்தால் கிளை வாய்க்கால்களின் இருபக்கங்களும் மண்ணரிப்புக்கு உள்ளாவதைத் தடுக்கும் விதமாக கடந்த 2017ஆம் ஆண்டு இரணைமடு மீள் கட்டுமானத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து கிளிநொச்சி 4ஆம் வாய்க்கால் பரவிப்பாஞ்சான் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் உள்ள வயல் நிலங்களுக்கு தண்ணீர் விநியோகம் செய்யும் கிளை வாய்க்காலின் தடுப்பு கொங்றீட் சுவர்கள் அமைக்கப்பட்டன. கட்டி முடிக்கப்பட்டு நான்கு வருடங்கள் கூட முழுமையாக பூர்த்தியாகாத நிலையில் அவை சரிந்து வீழ்ந்துள்ளன.

இதனால் எதிர்வரும் சிறுபோக நெற்செய்கையின் போது பயிர்களுக்கான நீர் விநியோகம் சீரான முறையில் நடைபெறாதென்பதால் இதனை அகற்றித் தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோரியுள்ளனர். (ஐ-12)



# கிளிநொச்சி - வன்னேரிக்குளம் வீதி சீரமைப்பு நடவடிக்கைக்காக தற்காலிகமாக முடக்கம்

கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் வீதி புனரமைப்பு செய்யப்படுவதனால் அக்கராயனில் இருந்து 8ஆம் கட்டை வரை வீதி தற்காலிகமாக மூடப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வாகனங்கள் ஸ்கந்தபுரம், மணியங்குளம் ஊடாக வன்னேரிக்கு எத்துக்கு பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

68 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த வன்னேரிக்குளம் வீதி அக்கராயனில் இருந்து புனரமைப்பு செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-13)

# வறுத்தலைவிளான் பிள்ளையார் வீதியை சீரமைக்க கோரிக்கை

தெல்லிப்பழை, மார்ச் 23

தெல்லிப்பழை பிரதேச சபையின் ஆளுகையில் உள்ள வறுத்தலைவிளான் பிள்ளையார் கோயில் வீதி நீண்டகாலமாக சீரமைப்பு பணிகள் இன்றி குன்றும் குழியுமாக காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்ததாவது;

கட்டுவன், மயிலிட்டி, தையிட்டி என பல வீதிகள் தற்போது காப்பெற் வீதிகளாக சீரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால் பிரதேச சபைக்கு உட்பட்ட இந்த வீதி 5 வருடங்களுக்கு முன்னர் திருத்தப்பட்ட போதும் தற்போது சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுகிறது.

வீதி சேதமடைந்துள்ளமையால் நோயாளர் காவு வண்டி கூட விரைந்து வரமுடியாதுள்ளது.

எனவே குறித்த வீதியை உடனடியாக உரிய முறையில் சீரமைக்க பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோமென்றனர். (ஐ)

# மாணவர்களுக்கு உபகரணங்கள்

புத்தூர் வடக்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள 25 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

கொழும்பு கொச்சிக்கடை லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்தினர் இவற்றை வழங்கினர். (வ-9)

# இந்துமதம் காட்டும் ஆன்மிகம்; தெய்வீக ஞானப் பேருரை

கோப்பாய் தெற்கு பழைய வீதி அருள்மிகு ஞானவைரவப் பெருமான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 17 ஆம் திகதி ஆரம்பமாகி, தொடர்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை "இந்துமதம் காட்டும் ஆன்மீகம்" எனும் தலைப்பில் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தெய்வீக பேருரை நிகழ்த்தி வருகிறார். தொடர்ந்து மாணவர்களிடத்தே ஆன்மிக சைவநெறி சார்ந்த வினாக்கள் கேட்கப்பட்டு, பரிசில்களும் வழங்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# புதுவருடக் கொண்டாட்டத்தில் சுகாதார விதிகளை பின்பற்றுக

## பொலிஸார் ஆலோசனை

**கொழும்பு,மார்ச் 23**

**எதிர்வரும் சித்திரைப் புதுவருடக் கொண்டாட்டத்துக்குத் தயாராகும்போது, உரிய சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்ற வேண்டும் என்று பொதுமக்களிடம் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.**

இலங்கையில் சித்திரைப் புத்தாண்டு அனைத்து இன மக்களாலும் கொண்டாடப்படும் பண்டிகையாகக் காணப்படுகின்றது. அடுத்த சில வாரங்களில் இந்தப் பண்டிகை கொண்டாடப்படவுள்ளது.

இலங்கையில் கொரோனாத் தொற்றும் தற்போது தீவிரம் பெற்றுள்ளதால் இந்தப் பண்டிகைக் கொண்டாட்டங்கள் கொரோனாக் கொத்தணிகளை உருவாக்கி விடலாம் என்ற அச்சம் தன்னார்வலர்களிடம் உள்ளது. இந்த நிலையில்தான் பொலிஸாரிடம் இருந்து இவ்வாறான கோரிக்கை வந்துள்ளது.

அடுத்த சில வாரங்களில் தமிழ் - சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு பொருள்கள் கொள்வனவுகளில் ஈடுபடுவோர் மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். அனைத்து விற்பனை நிலைய உரிமையாளர்கள் மற்றும் முகாமையாளர்கள் சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்ப, விற்பனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-க)



## வருடாந்த உற்சவம்

திருகோணமலை, மார்ச் 23

திருகோணமலை அருள்மிகு மாதுமையம்பாள் உடனுறை கோணேசப் பெருமானின் பங்குனி உத்தர வருடாந்த உற்சவம் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. (ச-40)

## கடற்படை பிரதானியாக ருவன் பெரேரா நியமனம்

கொழும்பு, மார்ச் 23

இலங்கை கடற்படையின் பிரதானியாக ரியர் அட்மிரல் ருவன் பெரேரா, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, கடற்படை தலைமையகத்தில் வைத்து ரியர் அட்மிரல் ருவான் பெரேராவுக்கு நியமனக் கடிதத்தை வழங்கினார்.

36 ஆண்டுகளுக்கும் மேலாக கடற்படை சேவையிலிருந்து ரியர் அட்மிரல் சுமித் வீரசிங்க நேற்றுமுன்தினம் ஓய்வுபெற்றதை அடுத்து குறித்த பதவிக்கு ரியர் அட்மிரல் ருவன் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## காடழிப்பை ஆதாரங்களுடன் நிரூபிக்க ஐ.ம.ச. யால் முடியும்

### எஸ்.எம்.மரிக்கார் எம்.பி

நாட்டில் எவ்வித வன அழிப்புக்களும் இடம்பெறவில்லை என அரசு கூறுகின்ற போதிலும், எந்தெந்தப் பகுதிகளில் காடுகள் அழிக்கப்பட்டு ஹொட்டல்கள் நிர்மாணிக்கப்படுகின்றன என்பதை ஆதாரங்களுடன் எம்மால் நிரூபிக்க முடியும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற் கொண்டு புதியதொரு மாற்றத்தை எதிர்பார்த்துத்தான் 69 லட்சம் மக்கள் அதற்குமுன்னர் அரசியலில் ஈடுபடாத தலைவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தனர். ஆனால் அந்த மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு முரணாக சுற்றாடல் அழிப்பு தொடர்பான விழிப்புணர்வு சித்திரங்களைக்கூடக் காட்சிப்படுத்த முடியாத நிலைமை இளம் சந்ததியினருக்கு ஏற்பட்டுள்ளது. இவை தொடர்பில் மக்களுக்கு தெரியப்படுத்தும் ஊடகங்கள் நேரடியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.

பொலிஸாரும் நேரடியாக அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடும் நிலை ஏற்பட்டுள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் முதன்முறையாக 'எமது அரசு என்று கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். உயர் பதவிகளிலுள்ள அதிகாரிகள் இவ்வாறு செயற்படும்போது கீழ்மட்டத்திலுள்ள அதிகாரிகளிடம் எவ்வாறு ஒழுக்கத்தை எதிர்பார்க்க முடியும்?

ஊடகங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தெரிவித்த கருத்துக்கள் பல விடயங்களை நினைவுபடுத்துகின்றன. சில ஊடகங்கள் அரசுக்குச் சார்பான கருத்துக்களை வெளியிடும்போது அவை போற்றப்பட்டன. எனினும் தற்போது மரங்கள் வெட்டப்படுவதை வெளிப்படுத்தும்போது அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியில் பல குறைபாடுகள் காணப்பட்ட போதிலும், ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது என்றார். (ப)



## யோகர் சுவாமிகள் குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யோகர் சுவாமிகளின் 57 ஆவது குருபூசை தின நிகழ்வு நாளைமறுதினம் வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியில் உள்ள சிவதொண்டர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.


அன்றையதினம் யோகர் சுவாமிகளது திருமேனிக்கு திவ்வியமான அபிசேக ஆராதனை இடம்பெற்று மதியம் அன்னதானம் வழங்கப்படும்.

இன்று செவ்வாய்க்கிழமை மற்றும் நாளை புதன்கிழமை ஆகிய நாள்களில் வழமை போன்று ஆச்சிரம வாழ்வு நாள்களாக கடைப்பிடிக்கப்படும்.

இந்த நாள்களில் நற்சிந்தனை முற்றோதல் ஓதி நிறைவு செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நாட்டில் கொரோனா தொற்றாளர் அதிகரிப்பு

### அரச தகவல் திணைக்களம் தகவல்



கொழும்பு, மார்ச் 23

நாட்டில் மேலும் 354 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதில் 342 பேர் மினுவாங்கொடை - பேலியகொட கொத்தணியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை - பேலியகொட கொத்தணியுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்களின் எண்ணிக்கை 85 ஆயிரத்து 465 ஆக உயர்ந்துள்ளது. வெளிநாட்டிலிருந்து வந்த 12 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதன்படி, இலங்கையில் கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 89 ஆயிரத்து 497 ஆக உயர்ந்துள்ளது.

தற்போது மருத்துவமனைகள் மற்றும் சிகிச்சை மையங்களில் 2 ஆயிரத்து 883 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் 293 பேர் கொரோனாத் தொற்றால் குணமடைந்துள்ளனர்.

கொரோனாத் தொற்றால் குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 86 ஆயிரத்து 743ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்று சந்தேகத்தில் 383 பேர் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், தற்போது இலங்கையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 546 ஆக உயர்ந்துள்ளது. (ப)

## கொழும்பு மாநகருக்கு தொலைபேசி சேவை



கொழும்பு, மார்ச் 23

கொழும்பு மாநகர சபையின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள புதிய தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய 0112208208 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அதிகாரிகளைச் சந்திப்பதற்கான திகதி, நேரத்தை ஒதுக்கிக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தொலைபேசி இலக்கமானது கடமை நாள்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 4.30 மணிவரை மாத்திரமே செயற்பாட்டில் இருக்கும் என்பதுடன், அவசர சேவையான தீயணைப்பு மற்றும் நீர்வழங்கல் சேவைகளுக்கான தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் செயற்பாட்டில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

## உச்சிமலை கிராமத்தில் வாசிப்புப் பாசறை

யாழ்ப்பாணம், மார்ச் 23

சிறுவர்களின் வாசிப்புத் திறனை விருத்தி செய்தல் மற்றும் ஊக்கப்படுத்தும் வகையில் சிறகுகள் அமைப்பு முன்னெடுத்து வரும் வாசிப்புப் பாசறை செயற்றிட்டம் நாவலப்பிட்டி உச்சிமலை கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் மாதாந்தம் 2 நாள்களில் வாசிப்பு ஊக்கப்படுத்தல் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேலும் நாடளாவிய ரீதியில் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன், வாசிப்புடன் கூடிய சிறுவர் ஆளுமை விருத்தியை உருவாக்கும் வகையில் தன்னார்வலர்களுக்கான பயிற்சி நெறியும் நடத்தப்படவுள்ளது. (வ-இ)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாண இந்துசமயப் பேரவை திருவருள் மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை நடராஜப் பெருமானுக்கு குடமுழுக்கு நாளை புதன்கிழமை காலை 6.38 மணி முதல் 7.20 மணிவரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (ஐ)

SHANTHIHAM
Association for Health & Counselling

## Vacancy Announcement

Shanthiham is a non-profit, local Non-Governmental Organization (NGO), collaborate with the communities to improve their well-being, working in the Northern Region of Sri Lanka since 1988. Shanthiham has developed as an organization that provides both a Counselling Centre and Training Centre for Mental Health and Psychosocial Support (MHPSS) for the Northern province of Sri Lanka. Shanthiham is dedicated in improving the community well-being of individuals, families and communities.

Shanthiham is looking for a well experienced, energetic, self-motivated and dedicated people from Northern province to apply for **Professional Counsellor - Female (1)** position.

**Professional Counsellor** position requires minimum of Diploma or higher qualification (Advanced Diploma/ Degeree) in Counselling and be a certified Counsellor by any recognized institution. Sound knowledge in Counselling techniques and 3 to 5 years of work experience in a Govt/NGO/INGO in the Counselling field. Computer literacy with documentation and report writing skill are essential. Higher prficency in Tamil and fluency in writing and communication in English is expected. Candidate shoud be able to work both at office/field when required and to work on full time or part time basis.

Remuneration/Duration for contract (including the employee benefits) could be negotiated based on professional qualifications, experience and Part / Full time basis.

Applications for the above posts should be sent along with the CV and the letter of motivation to the following address on or before 31.03.2021. The candidate can also send his or her application via the following e-mail address. Only shortlisted candidates will be contacted.

The Admin/HR Manager - Shanthiham,
No. 8, 8/1, Katpahavinayagar Lane, Jaffna.
Telephone No.: 021-222-3338 Email address direct: director@shanthiham.org



அழகிய வீடொன்றினை கட்டவேண்டுமா?

**10 வருட உத்தரவாதம்**

உங்கள் விருப்பத்திற்கேற்ப கட்ட வேண்டுமா? அல்லது திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமா? உங்கள் பணவசதிற்கேற்ப தகுதிவாய்ந்த பொறியியலாளர்களின் மேற்பார்வையின் கீழ் கட்டித் தரப்படும்.

உயர்தர சேவைக்கு அழையுங்கள்.

**0776644832, 0778354055**



**விற்பனைக்கு**

வெட்கிளுவைக் கதியால் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 8025 826**



**தேவை**

யாழ்ப்பாண பாரம்பரிய உணவு சமையலாளர் தேவை.
(Rice and Curry, Puttu, Idiyappam)

**Gnanams Hotel & Restaurant, Jaffna.**
**077 630 9947, 076 222 0632**


## 45ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 31 . 03 . 1979

இறைவன் நிழலில் 07 . 02 . 2021

### அமரர் விசுவநாதர் பாலரூபன்

B.Sc (Computer Science)P.G.D.E

**யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி, கணினி (I.C.T) ஆசிரியர்**

ஊர் போற்றும் உத்தமராய்
சமூகத் தொண்டில் முன்னின்ற செல்வாக்கு மிக்கவராய்
தாய் தந்தையிடத்து பாசம் கொண்டவராய்
கட்டிய மனைவி பிள்ளைகள் மீது நேசம் நிறைந்தவராய்
அரியாலை சரஸ்வதி சமூகத்தின் முன்னாள் செயலாளராய்
அரியாலை சுதேசியத்தின் செயற்பாட்டாளராய்
அரியாலை சமூகங்களின் சகல பங்களிப்பாளராய்
கற்பித்த யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில்
நன்கு மதிக்கப்பட்ட ஒருவராய் நிறைந்த சேவைகள்
புரிந்த பேராளன் திடீரென எமைப்பிரிந்து
இறைபதம் அடைந்தனரே!

**குடும்பத்தினர்.**


**லவ் லேன், உடுவில், சுன்னாகம்.**

**இல.92, கனகரத்தினம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.**

## மரண அறிவித்தல்

### வீரசிங்கம் பரமசிவம்

**தோற்றம் : 25.11.1955** **மறைவு: 22.03.2021**



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கு வட்டுவினியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் பரமசிவம் (22.03.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் சிவஞானம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நடராஜா ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுகிர்தன் (பிரான்ஸ்), சுஜீவன், சுதர்சன், மஞ்சுதா, வித்தியா (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உஷாயினி (பிரான்ஸ்) ஜானு, விஜிதா, திருச்செந்தூரன், சுதர்சன் (சுவீடன்) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற தர்மபாலு, தர்மராஜா, சிவபாக்கியம், பராசக்தி (குஞ்சு), லோகநாதன் (கொலண்ட்), திருச்செல்வம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, கணேஸ்வரன் மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், அக்ஷயா, அக்ஷிதன், சாஜிஸ், ரஸ்மிகா, கபிலேஷ, நித்தியா, திலக்ஷி, நிலக்சிகா, ஜித்தேஷ், சதுஜா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வட்டுவினி, இணுவில் மேற்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 9120 355**


இல - 245. பலாலி வீதி கந்தர்மடத்தில்
இயங்கிய எமது நிறுவனம்
புத்தம் புது பொலிவுடன்
இல - 91, பலாலி வீதி திருநெல்வேலியில்
இயங்குகின்றது என்பதை மகிழ்வுடன்
அறியத்தருகின்றோம்

**உங்கள் மழலை செல்வங்களின் உயிரோவியமான புகைப்படங்களுக்கு**

# பேபி போட்டோ

**போட்டோ அன் வீடியோ**
**BABY PHOTO &VIDEO**




கலர் பிறிண்டிங்
அல்பம்
கிறிஸ்டல் பிறேம்
லேசர் கட்டிங்
பிளாஸ்ரிக் ஐடி காட்
டி-சேட் பிறிண்டிங்
மக் பிறிண்டிங்
போட்டோ கொப்பி
லெமினேற்றிங்



அங்கீகாரம் பெற்றவர்
NIC தேசிய அடையாள அட்டை
ஒன்லைன் பாஸ்போட்

எமது பழைய முகவரியில் இயங்கும் வேறு எந்த நிறுவனத்திற்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை எமது வாடிக்கையாளர்களிற்கு அறியத்தருகின்றோம் எமக்கு வேறு எந்தவொரு கிளையும் இல்லை


## மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 02 . 1930

இறப்பு 22 . 03 . 2021

### மயில்வாகனம் இராசரத்தினம்

நவக்கிரி புத்தூர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் இராசரத்தினம் நேற்று (22.03.2021) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், செல்வரத்தினம், அருளம்மா, தாமோதரம்பிள்ளை (சுவிஸ்), செல்வசரஸ்வதி, கனகலிங்கம் (சுவிஸ்), மகிழேஸ்வரி, பாலசுந்தரம் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இந்துமலர், பாலசிங்கம், வசந்தநிதி, ஜெகநாதன், ராஜலட்சுமி, தட்சணாமூர்த்தி, சுஜாதா, சுபாசினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ரஜீபா-லோபிதன் (சுவிஸ்), பகீரதன்-தங்கக்கிளி (ஜேர்மன்), லோபிதன், பாமினி-கேதீஸ்வரன், பாலச்சந்திரன்-டயானி, லவணியா-குபேரன் (சுவிஸ்), சங்கவி (சுவிஸ்), கஜேந்திரன், கௌசலா-முருகானந்தம், அஜீபன் (சுவிஸ்), அஜித்தா (சுவிஸ்), அனித்தா (சுவிஸ்), சாந்தரூபன், யாழினி, தயாரூபன், டிலானி, நிலவன், மிதுனன் ஆகியோரின் அன்புப் பேரனும், யஸ்மினி, யஸ்மிதா (சுவிஸ்), வர்சிகா, அஸ்விகா (ஜேர்மன்), தாருஷா, ஆருஷ் (சுவிஸ்) விராத் (சுவிஸ்), கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நிலாவரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொலைபேசி இல.**
**077 5322901, 0777 976342.**

**தகவல்: பிள்ளைகள்**

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் கபிரியேல் செபஸ்ரியாம்பிள்ளை

(செட்டியார்)



தாய் மடியில் 09.07.1934 இறைவனடியில் 21.02.2021

அன்னாரின் 31ம் நாள் நினைவஞ் சலியை முன்னிட்டு 23.03.2021 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் யாழ் புனித மரியன்னைப் பேராலயத்தில் திருப் பலி ஒப்புக் கொடுக்கப்படும். தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளு மாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல.53, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

## வலிகாமம் வடக்கு பிரதேசசபை - மல்லாகம் உப அலுவலகம்

**விண்ணப்பதாரர் பெயர் :- திரு.Dr.கெங்காதரன் இந்திரமோகன்**
**முகவரி :- கும்பளாவளைப்பிள்ளையார் கோவில் வீதி, அளவெட்டி.**

வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட் டாரம் 05, பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள மல்லாகம் கோவிற்பற்றும் அளவெட்டி இறையுமான தாதரவை என்ற ஆதனம் N.சின்னத்தம்பி யும் ஏனை-யோரும் என்ற பெயரில் ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.
குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் S.இளையதம்பி முகதாவில் நிறை வேறிய 1411 / 12.05.1957, 199 / 20.06.1950, 2660 / 02.02.1949 ஆகிய அறுதி உறுதிகள் மூலம் நிலப்பரப்பு 18 குழி 07.00 கொண்ட ஆதனமானது முருகர் சின்னத்தம்பி, முருகர் பொன்னையா ஆகியவர்களுக்கு சொந்தமாக இருந்தது. பின்னர் முருகர் சின்னத்தம்பி இறந்து போக அவரின் பங்கு நிலப்பரப்பு 09 குழி 03 3/8 கொண்ட ஆதனத்தில் நிலப்பரப்பு 05 குழி 16.50 இனை பிரசித்த நொத்தாரிஸ் மு.திருநாவுக்கரசு முகதாவில் நிறைவேறிய 2301 / 09.02.2007 இலக்க உறுதி மூலம் முருகர் சின்னத்தம்பியின் வாரிசுகளான சின்னத்துரை செல்வகுமாரன் பெண் கேமாவதி, குமரகுரு ரவீந்திரன் பெண் பத்மாவதி, செல்வேந்திரா செல்லத் துரை பெண் அகிலாண்டநாயகி, அம்பலம் அம்பிகைபாகன் பெண் திலகவனிதா, சின்னத்தம்பி செல்வவினாயகமூர்த்தி, சின்னத்தம்பி விமலானந்தமூர்த்தி ஆகி யவர்கள் தமது அற்றோனித்தத்துவக்காரனான கெங்காதரன் இந்திரமோகன் மூலம் செல்லத்துரை கெங்காதரன் பெண் மங்கையற்கரசி ஆகியவர்களுக்கு அறுதியளிக்கப்பட்டது. பின்னர் செல்லத்துரை கெங்காதரனின் இறப்பின் பின் அவரின் மனைவியான கெங்காதரன் மாங்கையற்கரசி பிரசித்த நொத்தாரிஸ் ந.தம்பிமுத்தன் முகதாவில் நிறைவேறிய 12265 / 03.10.2019 உறுதி மூலம் கெங்காதரன் இந்திரமோகனுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.
முருகர் பொன்னையா இறந்து போக அவரின் பங்கு நிலப்பரப்பு 09 குழி 03 3/8 கொண்ட ஆதனத்தில் நிலப்பரப்பு 01 குழி 17.62 இனை பிரசித்த நொத்தாரிஸ் வி.மணிவண்ணன் முகதாவில் நிறைவேறிய 595 / 11.01.2019 இலக்க உறுதி மூலம் முருகர் பொன்னையாவின் வாரிசுகளில் சிலரான பொன்னையா லிங்க ராஜா, பொன்னுத்துரை பரமலிங்கம் பெண் வசந்தாதேவி ஆகியவர்கள் சகோத ரனான பொன்னையா கனகசபைக்கு நன்கொடையளித்துள்ளார். பின்னர் அவர் பிரசித்த நொத்தாரிஸ் வி.மணிவண்ணன் முகதாவில் நிறைவேறிய 913 / 04.03.2020 இலக்க உறுதி மூலம் கெங்காதரன் இந்திரமோகனுக்கு அறுதியாக விற்றுள்ளார்.

**ஆதன விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் அளவெட்டி இறையுமான "தாதரவை" நிலப்பரப்பு 05 குழி 16.50. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்களின் 2141 / 08.10.2007 இலக்க நிலஅளவைப்பட வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப் பட்டுள்ளது.

| | |
|---|---|
| **கிழக்கு** | - தருமலிங்கத்துக்கும் சுப்பிரமணியம் பெண் திலகவதிக்குரிய ஆதனங்கள் |
| வடக்கு | - பிள்ளையார் வீதி |
| மேற்கு | - பொன்னையா கனகசபையின் ஆதனம் |
| தெற்கு | - கையொழுங்கை |

2. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை மல்லாகம் கோவிற்பற்றும் அளவெட்டி இறையுமான "தாதரவை" நிலப்பரப்பு 01 குழி 17.62. இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் T.பாலசுப்ரமணியம் அவர்களின் 56/2015 / 15.06.2015 இலக்க நிலஅளவைப்பட வரைபடத் தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| கிழக்கு | - கெங்காதரன் இந்திரமோகனின் ஆதனம் |
| பிள்ளையார் வீதி மேற்கு | - மிகுதி ஆதனம் |
| தெற்கு | - ஒழுங்கை |

மேற்குறித்த ஆதனத்தை கெங்காதரன் இந்திரமோகன் என்னும் பெயரில் பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவி னர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆத-னப்பெயர்மாற்றம் செய்வதால் வ்ரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்,**
**வலிகாமம் வடக்குபிரதேசசபை,**
**காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**


யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

புத்தாண்டு விசேட தள்ளுபடி

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்

## இந்தியன் செலக்ஷனின்

புத்தம் புதிய ஆடைத் தெரிவுகள்

**கொட்டன் Top, டெனிம் Top, மொடன் Top, சல்வார்கள், சல்வார் துணிகள், பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சேட், T –சேட், ரவுசர் வகைகள், பார்ட்டி புறொக்ஸ் என இன்னும் ஏராளமான ஆடைத் தெரிவுகள்.**



அனைத்து வாடிக்கையாளர்களும் சுகாதார நடைமுறைகளை பேணவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

**இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்**
**காலம்: 20.03.2021 - 13.04.2021 வரை**


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 . 02 . 1943



இறப்பு 04 . 03 . 2020

திருமதி

### பேபிசறோஜா துரைராஜா

ஆண்டு ஒன்று போனதம்மா உன் அழியா நினைவில் அபலைகள் நாம் நீங்கா உன் நினைவில் உன் சொந்தங்கள் உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்.

இன்று 23.03.2021 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் (345, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்) நடைபெறும். பேபிசறோஜா துரைராஜாவின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவி-னர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**375, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர் 077 543 0315**

## மரண அறிவித்தல்

தோற்றம்
31 . 12 . 1976



மறைவு
21 . 03 . 2021

# திரு ஆறுமுகம் ஈஸ்வரகுமாரன்

**(ஈசன் E.S.P)**

கஜமுகன் ஹாட்வெயார் களஞ்சிய முகாமையாளர்

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் இல. 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து ஆறுமுகம் ஈஸ்வர குமாரன் அவர்கள் 21.03.2021 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும் பத்மசோதிநாதன் (சோதி) நவநீதராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் சுதர்சினியின் (சுதா) அன்புக் கணவரும், லிஷான், சுகந்தினி, (யா/ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) லிஷாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருட் செல்வி, காலஞ்சென்ற நிர்மலகுமார், சத்தியராணி, மேனகா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ஆனந்தராசா, குகேஸ்வரன் சுப்பிரமணி யம், ஜெயதர்சன், ஜெயதர்சினி, சிவதர்சினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல. 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் அவரது இல்லத்தில் இன்று (23.03.2021) காலை 7 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6913 239**

## மரண அறிவித்தல்



# கந்தையா கணபதிப்பிள்ளை

(ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்)

அல்வாய் கிழக்கு, தென்னியம்பிள்ளையை பிறப்பிடமாகவும் இலக்கியவாசா அல்வரய் கிழக்கை (கலட்டி) வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை (ஓய்வுநிலை பிரதி அதிபர் - யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்) நேற்று (22.03.2021) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-மீனாட்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பொன்னையா-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசம்மா, நவரத்தினம், பொன்னம்மா மற்றும் கனகம்மா, காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, நடராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக் கணவரும், அருந்ததி (கொழும்பு), புனிதமதி (லண்டன்), வளர்மதி, ஜங்கரன் (ஆயுள்வேத வைத்தியர் - சித்த மத்திய மருந்தகம், பருத்தித்துறை), காந்திமதி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுபேந்திரன் (லண்டன்), மகேந்திரன் (ஓய்வுநிலை அலுவலக உதவியாளர்-காணிப் பதிவகம், பருத்தித்துறை), தமிழ்ச்செல்வி (முகாமைத்துவ உதவியாளர், யாழ் பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமனாரும், ஆனந்தி, ஆதவன், பிரியங்கா, துவாரகா, திவ்யா, பவித்ரா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இலக்கியவாசா,**
**அல்வாய் கிழக்கு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# திருமதி சர்வானந்தசிவம் மீனாவதி



**அன்னை மடியில்**
**16.06.1962**

**அம்பிகை திருவடியில்**
**22.03.2021**

யாழ் வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 5ம் வட்டாரத்தை மற்றும் வல்வெட்டித்துறையினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சர்வானந்தசிவம் மீனாவதி அவர்கள் ( 22.03.2021) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேலுப்பிள்ளை ரெத்தினம்மா அவர்களின் அன்பு மகளாரும், காலஞ்சென்றவர்களான காராள பிள்ளை வடிவாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகளும், சர்வானந்த சிவத்தின் ஆருயிர் மனைவியும், பத்மா வதியின் அன்பு சகோதரியும், கிருபானந்தசிவம், ரதீஸ்வரி, நீலானந்தசிவம், பாலேஸ்வரி, காலஞ்சென்ற விநாயக சிவம் மற்றும் நித்தியானந்தசிவம், குகனேஸ்வரி, கோபாலசிவம் ஆகியோரின் பாசமிகு அண்ணியாரும் ஜெயபாலனின் அன்பு மைத்துனியும் றஞ்சித்,விசு ஆகி யோரின் பாசமிகு சித்தியுமாவார் .

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று 10.00 மணி அளவில் தகனக்கிரியைக்காக ஊரணி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவபுர வீதி,**
**வல்வெட்டித்துறை,**
**சிவசக்தி இல்லம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

## சஹ்ரானின் கொள்கைகளை ஏற்றுக்கொள்கிறதா ஜே.வி.பி?

### சரத் வீரசேகர சந்தேகம்

கொழும்பு, மார்ச் 23

ஜே.வி.பி. சஹ்ரான் ஹாசிமின் கொள்கைகளை ஏற்றுக்கொள்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; உயிர்த்த ஞாயிறு தாக்குதலை மேற்கொண்டவரின் தந்தையின் பெயர் ஜே.வி.பியின் தேசியப் பட்டியலில் இடம்பெற்றிருந்தது.

இது குறித்து ஜே.வி.பியின் தலைவரிடம் விசாரணைகள் இடம்பெறும். ஜே.வி.பியின் பிமல் ரட்நாயக்க பழங்குடியினத்தவர்களே சிலைகளை வழிபடுவார்கள் எனக் குறிப்பிட்டுள்ளார். சஹ்ரான் ஹாசிம் போன்ற அடிப்படைவாதிகளும் சிலை வழிபாட்டுக்கு எதிரான கொள்கைகளைக் கொண்டுள்ளதால், ஜே.வி.பியிடமும் அதே கொள்கைகள் உள்ளனவா என்ற சந்தேகம் காணப்படுகின்றது.

ஜே.வி.பியின் மத்தியில் மக்கள் ஆதரவு குறைவடைந்துள்ளது. எதிர்காலத்தில் மக்கள் அவர்களை ஆதரிக்கமாட்டார்கள் -என்றார். (ப)

## அல் ஒத்தெய்மின் – ஜனாதிபதி தொலைபேசியில் உரையாடல்

கொழும்பு, மார்ச் 23

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் பொதுச்செயலாளர் யூசெப் பின் அகமட் அல்ஒத்தெய்மினுக்கும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்குமிடையிலான தொலைபேசி உரையாடலொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்த உரையாடலின்போது, இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்கும் இலங்கைக்கும் இடையிலான தற்போதைய உறவுகள் மற்றும் இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் நிலைமை குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இஸ்லாமியச் சடங்குகளின்படி இறந்தவர்களை அடக்கம் செய்வதற்கான முஸ்லிம்களின் உரிமை குறித்து இலங்கை அரசின் முடிவை வரவேற்று, சர்வதேச அமைப்புகளை அணுகவும், இலங்கை ஜனாதிபதியின் விருப்பத்தையும் அல்ஒதமைன் இதன்போது பாராட்டினார்.

முஸ்லிம் சமூகங்களின் நிலைமைகளைப் பின்பற்றுவதற்கும், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு அல்லாத உறுப்பு நாடுகளில் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு கொண்டுள்ள ஆர்வத்தை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார். (ப)

### பசறை விபத்து

# இன, மத பேதமின்றி மக்களால் மீட்புப்பணி

## மருத்துவர் நெகிழ்ச்சி

பதுளை,மார்ச் 23

**பதுளை - பசறை வீதியில் இடம்பெற்ற கோர விபத்தின்போது, மக்களின் மனிதாபிமானச் செயற்பாடு தொடர்பில் மருத்துவர் ஒருவர் நெகிழ்ச்சியான கருத்துக்களை தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.**

பதுளை மாவட்ட மருத்துவமனை மருத்துவர் பாலித ராஜபக்சவே இந்தப் பதிவை வெளியிட்டுள்ளார். அவரது பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மருத்துவர் சமரபந்துவிடம் இருந்து அழைப்பு ஒன்று வந்தது. பஸ் விபத்தொன்று நடந்துள்ளது, உடனடியாக வருமாறு என்னை அழைத்தார்.

நான் உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று அனைத்து நடவடிக்கைகளையும் தயார் செய்தேன். 100 பேர் வரையான ஊழியர்களை ஆயத்தப்படுத்தினேன். நோயாளர் காவுவண்டிகளையும் ஏற்பாடு செய்தேன்.

பணிகளை ஆரம்பித்தவுடன் முதலில் வந்தவை அனைத்தும் சடலங்களாகவே காணப்பட்டன. எனது முழங்கால் ஊனமடைந்துள்ளது. ஆனாலும் செல்ல வேண்டிய கட்டாயம். 25 தொடக்கம் 30 கிலோ நிறையுடைய மருந்துப் பைகளை தூக்கிக்கொண்டு சென்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தோம். கற்பாறைகளும் உருண்டு வந்தன. காப்பாற்றச் சென்றவர்கள் பலர் அதிஷ்டவசமாக உயிர் தப்பினர். காயமடைந்தோரைக் காப்பாற்றச் சென்ற ஒருவர் தனது கால் ஒன்றையும் இழந்தார். 400 முதல் 500 பேர் வரையிலான மனிதச் சங்கிலி. கைகளில் உடல்கள். நோயாளிகள் மேல் நோக்கிக் கொண்டு வரப்பட்டனர். மிகுந்த சிரமத்துடன் நாமும் மேலே வந்தோம். 200 அடிக்கும் கீழே விழுந்த பஸ்ஸில் இருந்து மக்களைக் காப்பாற்ற இன மத பாகுபாடு இன்றி தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் ஒன்றாகச் செயற்பட்டனர்.

சுமார் 500க்கும் மேற்பட்ட மக்கள் மனிதச் சங்கிலியாக மாறி கீழே இறங்கி மக்களைக் காப்பாற்றப் பெரிதும் உதவினர். இனம், மதம் பேதமின்றி, மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்பது மாத்திரமே அவர்களது நோக்கமாக இருந்தது.

இந்த விபத்தின்போது உண்மையான மக்களின் மனங்களைப் பார்த்தேன், உங்கள் அனைவருக்கும் மிகவும் நன்றி. -என்றுள்ளது. (க-இ)

## கொரோனா பரிசோதனை புதுப்பிக்கப்பட வேண்டும்

### தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு,மார்ச் 23

கொரோனாப் பரிசோதனை முறைமையைப் புதுப்பிக்க வேண்டும் என்று இரசாயனப் பகுப்பாய்வு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. தற்போது மேற்கொள்ளப்படும் கொரோனாப் பரிசோதனை முறைமை மூலம், கண்டறிய முடியாத புதிய கொரோனா வைரஸ் சில நாடுகளில் பரவுகின்றது.

எனவே, பரிசோதனை முறைமையைப் புதுப்பிக்க வேண்டும் என்று சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஷ் வலியுறுத்தியுள்ளார். (க-இ)

## கதிரியக்க அறைக்குள் செவிலியர்கள் தடுப்பு

மஹரகம அபேக்ஷா புற்றுநோய் மருத்துவமனையில் இரண்டு செவிலியர்களை கதிரியக்க அறைக்குள் வைத்து பூட்டிய சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மஹரகம பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டுள்ளது என்றும், கதிரியக்க நிபுணர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ப)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி...

பொலிஸின்...

“பொத்துவில் முதல் பொலிகண்டி வரை” பேரணியில் பங்கேற்றவர்கள்மீது பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள “பி” அறிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நகர்த்தல் பத்திரம் கடந்த 5ஆம் திகதி பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள “பி” அறிக்கையின் அடிப்படையில் நீதிமன்றால் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

சட்டக் கோவையின்படி நடவடிக்கை எடுக்க முடியாது என்கின்ற நிலையில், பொலிஸாரின் இந்த நடவடிக்கைக்கு நீதிமன்றம் உடந்தையாகச் செயற்படக் கூடாது என்று சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிமன்று பொலிஸ் தரப்பு விளக்கத்துக்காக வழக்கை நேற்றுவரை ஒத்திவைத்தது. இந்த வழக்கை நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி மன்றாடியார் அதிபதி பொலிஸார் சார்பாக முன்னிலை இருந்தார்.

அரச தரப்பின் பூர்வாங்க ஆட்சேபனை சம்பந்தமாக மேலதிகமாக எழுத்து மூல சமர்ப்பணம் செய்வதற்கு கோரப்பட்டதை அடுத்து இரு தரப்பினருக்கும் எழுத்து மூல சமர்ப்பணத்தை முன்வைக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பூர்வாங்க ஆட்சேபனை தொடர்பில் எதிர்வரும் மே மாதம் 3ஆம் திகதி கட்டளை பிறப்பிக்கப்படும் என்று நீதிமன்று உத்தரவிட்டது. (எ26.319)

## தொலைபேசியில் துணை மன்னருடன் பேசிய ராஜபக்ச

கொழும்பு, மார்ச் 23



பிரதமர் மகிந்த ராஜபக்சவுக்கும் பஹ்ரைனின் துணை மன்னருக்கும் இடையில் தொலைபேசி மூலமான கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இரு தரப்பு உறவுகளை மேலும் விரிவுபடுத்துவது குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து ராஜபக்சவின் உத்தியோகபூர்வ ருவிற்றரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 01 . 1964



மறைவு 22 . 03 . 2021

### தர்மராஜதுரை குணராசன்

தும்பளை மணல் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் ஒல்லை வளவு தும்பளை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. தர்மராஜதுரை குணராசன் அவர்கள் நேற்று (22.03.2021) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தர்மராஜதுரை சற்குணவதி தம்பதியரின் அன்பு மகனும், திருமதி ரஜனி குணராசன் அவர்களின் அன்புக் கணவனும், திருமதி தேவகி முரளீதரனின் சகோதரனும், திருமதி நர்மிலா ஹரிதாஸ், திரு.குணராசன் தனேஸ்குமார் ஆகியோரின் தந்தையும், தனுஷாந், அர்த்தனா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.03.2021) செவ்வாய்க்கிழமை பி.ப 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக தும்பளை கோரியடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குணராசன் தனேஸ்குமார் (மகன்)

தனேஸ்-076 372 0173
ஹரிதாஸ்-077 923 8935

## ஐ.நா....

இலங்கையை போர்க் குற்றங்கள் தொடர்பான பொறுப்புக் கூறலுக்கு உட்படுத்தும் வகையில் கொழும்புக்கு எதிராக பிரிட்டன் தலைமையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் நேற்றுப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பே இன்று நடைபெறவுள்ளது.

பிரிட்டன், ஜேர்மன், கனடா, மொண்டிநீக்ரோ, வட மெசிடோனியா மற்றும் மலாவி ஆகிய நாடுகள் இணைந்தே இந்தப் புதிய பிரேரணையை முன்வைத்துள்ளன. இலங்கைக்கு ஆதரவு வழங்கும் வகையில் பிரேரணையை எதிர்ப்பதற்கு சீனா, ரஷ்யா, கியூபா, வெனிசுலா, பாகிஸ்தான், கொரியா, நேபாளம், இந்தோனேசியா, பங்களாதேஷ் மற்றும் பஹ்ரைன் உள்ளிட்ட நாடுகள் தீர்மானித்துள்ளன.

அதேவேளை, இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்குவதற்கு இணை அனுசரணை வழங்கும் ஐந்து நாடுகளுடன் ஆர்ஜென்டினா, ஆஸ்திரியா, பிரேஸில், கமரூன், டென்மார்க், மெக்சிக்கோ, செனகல், போலந்து, பிரான்ஸ், காபோன் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகள் தீர்மானித்துள்ளன.

இந்தியா மற்றும் ஜப்பான் உட்பட மேலும் சில நாடுகள் தமது நிலைப்பாட்டை அறிவிக்கவில்லை. அவை வாக்கெடுப்பில் பங்கேற்காமல் நடுநிலை வகிக்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, பிரேரணையை நிறைவேற்றிக்கொள்வதற்கான பெரும்பான்மையை இணை அனுசரணை வழங்கும் நாடுகள் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளன. இதற்கு பிரிட்டன் தலைமை வகித்து வருகின்றது என்று இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இந்தமுறை அங்கம் வகிக்காத போதும், இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளது. (ம)

## ஐ.நா.வை....

வட்டமாக அறிவித்துள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. அதில் ஜெனிவா வாக்கெடுப்பு தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகையிலேயே அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் நீதி மற்றும் நியாயத்தை அடிப்படையாகக்கொண்டு இலங்கை தொடர்பில் பிரேரணை முன்வைக் கப்படவில்லை. இலங்கைக்கு எதிரான பிரேரணையில் மேற்குலகம் மற்றும் வடக்கு அமெரிக்க நாடுகள் ஆகியவை மாத்திரமே கையொப்பமிட்டுள்ளன. எந்தவொரு ஆசிய நாடும் கையொப்பமிடவில்லை. ஆபிரிக்க வலயத்தில்கூட ஒரு நாடு மட்டுமே கையொப்பமிட்டுள்ளது. ஆக இலங்கை தொடர்பான பிரேரணை சர்வதேசத்தின் நிலைப்பாடு அல்ல. ஒரு தரப்பின் பூகோள அரசியல் நகர்வாகும்.

ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளுடன் இலங்கை சுமூக உறவைப் பேணும். சர்வதேச சட்டத்திட்டங்களுக்கு மதிப்பளித்து எமக்கான கடமை நிறைவேற்றப்படும். ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்குமிடையில் வித்தியாசம் இருக்கின்றது. ஆணையாளர் அலுவலகம்தான் இலங்கைமீது எதிர்மறையான பார்வையை செலுத்துகின்றது. எல்லைமீறிச் செயற்படுகின்றது. சட்டதிட்டங்களுக்கு முரணாக உள்ளக விவகாரங்களில் தலையிடுகின்றது.

கண்காணிப்பு பொறிமுறையை வெளிநாட்டு கட்டமைப்பிடம் கையளிப்பதற்கு எமக்கு சட்டரீதியான அனுமதி இல்லை. அவ்வாறு செய்வது அரசமைப்பை மீறும் செயலாகும். எனவே, தேசிய (உள்ளக) பொறிமுறையின் பிரகாரமே எதிர்கால நடவடிக்கை முன்னெடுக்கப்படும். இதற்கான பணிகள் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன. தேசிய பொறிமுறைக்கு சர்வதேசமும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்பதே சர்வதேச சட்டம்.

அதேவேளை, இலங்கைக்கு எதிராக சாட்சியங்களை திரட்டுவதற்கும் அதற்காக அதிகாரிகளை நியமிப்பதற்கும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையை ஏற்கமுடியாது.

ஜெனிவாவில் வாக்கெடுப்பு முடிவு என்னவாக இருந்தாலும் நாம் படையினரைப் பாதுகாப்போம். ஏனைய நாடுகள் அவ்வாறு செய்துள்ளன. முக்கியமாக பிரிட்டன் படையினர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் செய்யும் செயல்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்க முடியாது. தண்டனை வழங்கவும் முடியாது. இவ்வாறு அவர்களுக்கு சட்டரீதியாக பூரண பாதுகாப்பு வழங்கும் வகையில் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. நாமும் அவ்வாறு செய்வோம். இதற்கான சட்டங்கள் இயற்றப்படும். அரசமைப்புக்குகூட சரத்துகளை உள்ளடக்குவதற்குத் தயாராக இருக்கின்றோம். என்றார். (எ-44)

## வம்புச்...

பாதிப்பு ஏற்படும். எனவே, சர்வதேசத்துடன் மோதாமல் இராஜதந்திர மட்டத்திலான பேச்சுக்கள் மூலம் தீர்வுகளைக் காண்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி யோசனை முன்வைத்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் கொழும்பில் நடைபெற்றது. அதில் ஜெனிவாக் கூட்டத்தொடர் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தக் கருத்தை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையில், நிர்வாக சேவைக்கு இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமை உட்பட பல உள்ளக விவகாரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவற்றை எம்மால் நிவர்த்தி செய்யமுடியும். அதைச் செய்யாமல் முரண்படுவதால்தான் பிரச்சினைகள் தலைதூக்குகின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை முற்றுமுழுதாக சரியென நாம் குறிப்பிட முற்படவில்லை. எனினும், ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அங்கத்துவ நாடு என்பதால் அதன் சட்டத்திட்டங்களைப் பின்பற்ற வேண்டும். வெற்றியா, தோல்வியா என்பது முக்கியமல்ல. இலங்கைமீது தடைக... விதத்தில் நகர்வுகள் அமையவேண்டும். இலங்கை மீதான பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் சுற்றுலா அல்லது பொருளாதாரம் என ஏதேனுமொரு வழியில் தடைகளை விதிப்பதற்கு மனித உரிமைகள் பேரவை நடவடிக்கை எடுத்தால் யாருக்கு பாதிப்பு? அதன்மூலம் நாட்டு மக்களுக்கே சிக்கல் ஏற்படும். ஆகவே, நாடு தொடர்பாகவும், மக்கள் சம்பந்தமாக சிந்தித்தும் அரசு செயற்பட வேண்டும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கையை முழுமையாக ஏற்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. செய்யக்கூடியவற்றைச் செய்யவேண்டும். அதேவேளை, இந்தியாவின் ஆதரவை முன்கூட்டியே பெறுவதற்கும் அரசு முயற்சிக்கவில்லை. வெளிவிவகார சேவையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையே இது எடுத்துக்காட்டுகின்றது.

ஜெனிவாவில் இலங்கை தோல்வியடைந்தால் அழுத்தங்கள் வரும். தடைகள்கூட வரலாம். அதனால்தான் சர்வதேசத்துக்கு சவால் விடுக்காது, முரண்படாது பேச்சுக்கள் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு வலியுறுத்துகின்றோம் என்றார். (ம-44)

## வடக்கில்...

ரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடத்திலும், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்திலும் நேற்று 294 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதில் நால்வருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மன்னாரைச் சேர்ந்தவர்.

சுதுமலையைச் சேர்ந்த 63 வயதுப் பெண் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டது. தொற்றுக்குள்ளான இவர் ஏற்கனவே சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெறும் 83 வயதுப் பெண் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வசிக்கும் 32 வயதுப் பெண் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் ஏற்கனவே தொற்று உறுதி செய்யப்பட்டவருடன் நேரடித் தொடர்பில் இருந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. மன்னார் நகரைச் சேர்ந்த ஆண் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மன்னார் பொது வைத்தியசாலைத் தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட இவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-26)

## கொரோனா...

முன்தினம் மாலை இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார். இவர் ஏற்கனவே சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருந்தவர் என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பெண் கடந்தவாரமும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றுள்ளார். சிகிச்சைகளின் பின்னர் அவர் வீடு திரும்பியிருந்த நிலையில், அவருக்கு திடீர் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணுக்கு நேற்றுமுன்தினம் மருத்துவ சேவைகள் வழங்கிய யாழப்பாணம் போதனா மருத்துவனை அதிதீவிர சிகிச்சைப் பிரிவுத் தாதிய உத்தியோகத்தர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் உடல் கொரோனாத் தடுப்பு விதிமுறைகளுக்கு அமைய மின் தகனம் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## எந்த...

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நானும், எமது கட்சியின் தவிசாளரும், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்களைச் சந்தித்து கலந்துரையாடினோம். தேர்தலை நடத்துவதற்கு தாம் தயார் என ஆணைக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர். எனவே, தேர்தலை நடத்துவதற்கு சட்ட ரீதியில் தடையாக உள்ள காரணிகளை அரசு தகர்த்துக் கொடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல எந்த முறைமையின்கீழ் தேர்தல் நடத்தப்படும் என்பது தொடர்பில் தமது நிலைப்பாட்டை அரசு அறிவிக்க வேண்டும். அது தொடர்பில் அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். அப்போது எமது தரப்பு யோச னைகளை முன்வைக்கக் கூடியதாக இருக்கும். தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்பதே பிரதான எதிர்க்கட்சியின் நிலைப்பாடாகும். தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார். வேட்பாளர் தேர்வுக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. என்றார். (ந-44)

## கூடுகிறது...

அறிவிப்பு ஆகியவை தொடர்பில் இந்த வார சபை அமர்வில் எதிரணிகள் கேள்விகளைத் தொடுக்கவுள்ளன. அதேநேரம் சீனி விவகாரம் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இன்று விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தொடர்பான ஒத்திவைப்பு வேளை விவாதம் எதிர்வரும் 25 மற்றும் 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் மூன்று நாள்கள் விவாதிப்ப தற்கு தீர்மா னிக்கப்பட்ட நிலையில், ஏற்கனவே ஒரு நாள் விவாதம் இடம்பெற்றுள்ளது. இந்தவார சபை அமர்வில் இரு நாள்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (ம-44)

## உருத்திரபுரீஸ்வரர்...

வீர்ப்புப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. நேற்று இடம்பெற்ற கவனவீர்ப்புப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை, அருட்தந்தை யூட் அமலதாஸ், மதத் தலைவர்கள் மற்றும் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். (எ-ம6,113)

# ஐ.நா.வின் தீர்மானங்களை சிறப்பாக எதிர்கொள்வோம்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர நம்பிக்கை



**கொழும்பு, மார்ச் 23**
**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களை சிறந்த முறையில் எதிர்கொள்வோம் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
விடுதலைப் புலிகளின் போராளிகள் குறித்து மாத்திரம் கவனம் கொள்ளும் மேற்குலகம் யுத்தத்தில் உயிரிழந்த 29 ஆயிரம் படைவீரர்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணத்தைத் தவிர்த்து ஏனைய மாகாணங்களில் விடுதலை புலிகளின் தாக்குதலால் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்கள் குறித்து கவனம் கொள்ளாதது கவலைக்குரியது.
எந்த நாடுகளையும் பகைத்துக் கொள்ளாமல் ஜெனிவா விவகாரத்தை அரசாங்கம் சிறந்த முறையில் கையாளும். தீர்மானங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஒருசில விடயங்களை நாட்டின் சுயா தீனத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அரசமைப்புக்கு உட்படுத்தி உள்ளக பொறிமுறை ஊடாக செயற்படுத்த தீர்மானிக்கப்பட் டுள்ளது - என்றார். (ம)

# மரக்கன்றுகள் வழங்கப்பட்டன

வேலணை, மார்ச் 23
வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரனால் முன்னெ டுக்கப்படும் கனிதரும் மரங்களால் தீவுப்பகுதியை வளம்பெறச்செய்வோம் திட்டத்தின் கீழ் புங்குடுதீவு சதானந்த சிவன் ஆலய அடியார்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் அண்மையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. அத்தோடு புங்குடு தீவு ஐந்தாம் வட்டாரம் கேரதீவு பகுதி பொது மக்களுக்கும் மா, கொய்யா, கஜு, தேசி, நெல்லி போன்ற கனிதரும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.



(வ-இ)

**விற்பனைக்கு**
ஊர்க் கோழிக்குஞ்சு ஒன்று 60 ரூபா
தொடர்பு: 077 332 2433

**வேலையாட்கள் தேவை**
Lovely Flower Centre நெல்லியடிக் கிளைக்கு
பெண் வேலையாட்கள் தேவை.
தொடர்பு: 077 400 5023

**JOBSIN வேலை வாய்ப்புக்கள்**
அனைத்து விதமான வேலை வாய்ப்புக்கள் உங்களுக்காக காத்திருக்கின்றன. ஆண், பெண் இருபாலாரும் இணைந்துகொள்ளலாம்.
கோண்டாவில் ஐயப்பன் கோயிலுக்கு முன்பாக | தொடர்பு: 076 092 8460

# கிளிநொச்சி இ.போ.ச. சாலை பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு

## அமைச்சர் அமுனுகம உறுதி

கிளிநொச்சி, மார்ச் 23
கிளிநொச்சி மாவட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்கான நிரந்தர சாலை அமைத்தல் மற்றும் கிளிநொச்சி நகருக்கான பஸ் தரிப்பிடத்தை நிர்மாணித்தல் உள்ளிட்ட பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்று போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.
கிளிநொச்சி மாவட்டத்துக்கு அண்மையில் பயணம் மேற்கெண்ட இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகமவை வரவேற்று இ.போ.ச. போக்குவரத்துச் சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டபோதே அவர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.
கிளிநொச்சி மாவட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்கு நிரந்தர சாலை ஒன்றை அமைக்கவேண்டியதன் அவசியம் தொடர்பில் இலங்கை போக்குவரத்துச்சபை முகாமையாளர் தலைமையிலான குழுவினால் அமைச்சருக்கு வலியுறுத்தப்பட்டது.
இதன்போது போக்குவரத்துச்சாலைக்கென ஒதுக்கப்பட்ட காணிக்கான உரிமம் இன்னமும் போக்கு வரத்துச்சபைக்குக் கிடைக்கப்பெற வில்லை. எனவே இந்த விடயம் தொடர்பாக வடக்கு மாகாண ஆளுநருடன் பேசி காணி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும், காணி உரிமம் கிடைக்கப்பெற்ற தும், போக்குவரத்துச்சாலையைக் கட்டுவதற்கான பணிகளை உடனடியாக ஆரம் பிக்கலாம் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்தோடு சாலை வளாகத்திலேயே எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் பஸ் திருத்தப் பணிகளுக்கான தொழில்நுட்ப பிரிவு ஆகியவற்றையும் அமைக்க ஏற்பாடுசெய்யப்படும், கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்குமான சேவைகளை நடத்துவதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் சிறிய மற்றும் பெரிய பஸ்களும் விரைவில் பெற்றுத்தரப்படும் என்றும் அமைச்சர் உறுதியளித்தார். (ஐ-13)

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில் மெயின் றோட்டுடன் கிளிகடைச் சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நல்லூர் முருகன் ஆலயத்திலிருந்து 250M தூரம்
தொடர்பு: குரு - 077 468 3354
077 203 6402

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் பலாலி வீதி, கோண்டாவில் கொட்டைக்காடு வீதியில் 18 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்து கொடுக்கப்படும்
(பலாலி வீதியிலிருந்து 120M தூரம் காணி உள்ளது)
தொடர்பு: குரு - 077 623 4204
077 505 8561
077 235 2656

**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டை நவாலி வீதி. மூத்த விநாயகர் கோவிலடி மெயின் றோட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக. (தரகர் தேவையில்லை)
காணி பார்வையிடும் நேரம் : காலை 9.00 - மாலை 6.00 வரை
077 288 0152

# ஊடக ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க ஐ.ம.ச. முன்நிற்கும்

## அதன் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 23
ஊடகங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். ஊடகங்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னின்று செயற்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஊடகங்கள் தொடர்பில் தெரிவித்த கருத்துக்களின் மூலம் ஜனாதிபதியால் யாருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது என்பதை புரிந்து கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசுக்கு முன்னர் அரசுக்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்த ஊடகவியலாளர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை நினைவு படுத்துகின்றோம்.
ஊடகங்கள் தொடர்பில் இது போன்று முன்வைக்கப்படுகின்ற கருத்துக்களை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். ஊடகங்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தி என்றும் முன்னின்று செயற்படும். கடந்த ஒன்றரை ஆண்டுகளில் பெரும் சுற்றாடல் சீரழிவு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் பல பௌத்த மதத் தலைவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.
இதற்கு முன்னர் ஆட்சியிலிருந்து அரசுகளுடன் ஒப்பிடும்போது தற்போதைய அரசிலேயே பெருமளவில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டுள்ளன. தற்போது சுற்றாடலை பாதிப்படையச் செய்து ஹொட்டல்களை நியமிப்பதற்கு அனுமதிபத்திரமளிக்கப்பட்டுள் ளது. என்றார். (ப)

Maalai Matrimony
**மாலை திருமணசேவை**
இலங்கையின் முதற்தர இணையத்தள உலகத்தரம் வாய்ந்த திருமணசேவையாக விளங்கும் மாலை திருமண சேவையில் இணையவில்லையா? இணைவதற்கான சந்தர்ப்பத்தில் இணைந்து உங்கள் வாழ்க்கையை இன்பமாக்குங்கள்.
எமது சேவையின் அனுகூலங்கள்
➤ பதிவுக்கட்டணம் இலவசம் ➤ தரகுக் கட்டணம் இலவசம்.
➤ 24 மணிநேர சினேகபூர்வ வாடிக்கையாளர் சேவை.
(இந்த வருடம் மட்டும் 30 பேருக்கு மேல் எமது திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்).
தொடர்பு: 077 408 8241
இணையத்தளம்: maalai.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி ... த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.03.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.